மரணத்திற்குப் பின் என்ன நடக்கும்?

மண்ணறை வாழ்வு

மறுமை வாழ்வு



சொர்க்கமா?

நரகமா?

பிறமத நண்பர்கள் இஸ்லாம் கூறும்
தெளிவை அறிந்து பின்பற்றுவதற்காக!

MASFOT
Raise Yourself To Help Mankind
NABA
MAS FOUNDATION TRUST

MAS Foundation Trust, 19 Thacker Street, Purasawalkam, Chennai 600 084
88388 92393

உலகம் படைக்கப்பட்டு, முதல் மனிதன் **ஆதமின்** உருவாக்கத்திற்கு பின் **மூன்று முக்கிய கொள்கைகளை** முன்னிறுத்தியே **இறைவன்** இந்த **உலகத்தை இயக்குகிறான்.** இன்னும் இவ்வுலகம் **முடிவு (அழிவு)க்கு வரும்** வரை **இவ்வாறே இயங்கும்.** அந்த **மூன்றையும்** கீழ்க்கண்ட **புத்தகங்கள்** மூலம் நீங்கள் தெளிவாக **அறிந்து கொள்ள முடியும்.** தவறாமல் **படிக்கவும்.** உங்கள் **சந்ததிகளையும்** படிக்க ஆர்வபடுத்தவும்.



ஏகத்துவம்



தூதுத்துவம்



மரணத்திற்கு பின்

மரணத்திற்குப் பின் என்ன நடக்கும்?

மண்ணறை வாழ்வு - மறுமை வாழ்வு

சொர்க்கமா? நரகமா?

தொகுப்பு:

இப்னு முஹம்மத்

MASFOT
Raise Yourself To Help Mankind
NABA
MAS FOUNDATION TRUST

MAS Foundation Trust
No.19, Thacker Street,
Purasawalkam.
Chennai 600 084.
Mobile: 88388 92393

FREE DISTRIBUTION ONLY
இலவச விநியோகத்திற்கு மட்டும்

ABOUT THIS BOOK

Name of the Book	:	**MARANATHIRKU PIN ENNA NATAKKUM?**
Author	:	**Ibn Muhammad**
Assisted by	:	Sheikh & Sheikh
Language	:	Tamil
Edition	:	1st Edition (June 2024)
Copies	:	1000
Total Pages	:	88
Published by	:	**MAS Foundation Trust** No.19, Thacker Street, Purasawalkam, Chennai - 600 084. Mobile: **88388 92393**

உள்ளே...

✸ முன்னுரை.....08

1. மனிதனின் ஆசையும், இறப்பும், தெளிவில்லாத செய்திகளும்.....11

2. மரணத்திற்க்கு பிறகு வாழ்வு உண்டா? உயிர்ப்பித்தல் சாத்தியமா?.....14

3. மறு பிறவி உண்டா? உயிர்ப்பித்தல் சாத்தியமா?.....20

4. இஸ்லாம்.....22

5. இஸ்லாம் சொல்லும் அந்த சில விபரங்களை தெரிந்து கொள்வதற்க்கு முன்.....24

6. குர்ஆனும், நபிகள் நாயகம் அவர்களின் பொன் மொழிகளும்.....26

7. நம்மின் பிறப்புப் பற்றி (குர்ஆனும், நபிகள் பொன்மொழியும்).....28

8. நம்மின் வாழ்வைப் பற்றி (குர்ஆனும், நபிகள் அவர்களின் பொன் மொழிகளும்).....31

9. மரணத்தைப் பற்றி (குர்ஆனும், நபிகளின் பொன் மொழிகளும்).....33

10. இறந்த பின் ஆரம்பிக்கும் மண்ணறை வாழ்க்கை.....37

11. மண்ணறை தண்டனைக்கான காரணங்கள்.....40

12. மண்ணறைத் தண்டனைக்கான மற்ற பாவங்களில் சில.....44

13. நல்லோர்களின் மண்ணறை வாழ்க்கை.....52

14. மண்ணறை வெற்றிக்கான காரணங்கள்.....66

15. மறுமையின் விசாரணைக்குப் பிறகு சொர்க்கம், நரகம்.....72

✸ முடிவாக.....74

✸ முஸ்லிமாக ஆவதும் முஸ்லிமாக இருப்பதும் எப்படி?.....77



அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே!

உங்கள் கையில் தவழும் இந்த புத்தகம் உண்மையில் எல்லோரும் பேச பயப்படுகிற, யாரும் விரும்பாத ஒரு செய்தியாக நினைக்கிற நம்முடைய.

- **இறப்பு பற்றியும்,**
- **இறந்த பிறகு என்ன நடக்கும்? என்றும்,**
- **சொர்க்கம், நரகம் என்று சொல்லு கிறார்களே? அதெல்லாம் உண்மையா?**
- **என்னுடைய தற்சமய வாழ்வியலில் நான் இறந்த பிறகு எங்கு செல்வேன்? சொர்க்கத்திற்க்கா? இல்லை நரகத்திற்க்கா?**
- **யார் உறுதி செய்வார்கள்?**

என்ற இதுநாள் வரை விளக்கம் கிடைக்காத, தெளிவாகத் தெரியாத, அறிந்து கொள்ள அதிகம் ஆர்வம் காட்டாத ஒரு மிகப் பெரிய உண்மையை மிகத் தெளிவாக, புரிந்து கொள்ளும் விதத்தில் ஆதாரத்துடன் விளக்கும் ஒரு தொகுப்பே இச்சிறிய நூல்.

பெரும்பான்மையான நேரங்களில் அவ்வப்போது மனதில் ஊசலாடுவதும், குறிப்பாக நமக்கு தெரிந்த ஒருவர் எதிர்பாராத விதமாகவோ அல்லது, சின்ன வயதிலோ யாரும் இறந்து போகும் போதும் மனதில் எழும் ஒரு கேள்வி?

- **ஏன் மரணம் நிகழ்கிறது?**
- **சொல்லாம, கொள்ளாம முன்னறிவிப்பின்றி பொசுக்குன்னு வாழ்க்கை முடிந்துபோகிறதே?**
- **யார் நம் மரணத்தை முடிவு செய்கிறார்கள்?**
- **நான் இறந்த பிறகு என்ன நடக்கும்?**

- **நான் இறந்த பின் எனக்கு என்ன நடக்கிறது என்பதை என்னால் அறிய முடியுமா?**

என்பதையும் பார்ப்போம்.

இது ஒரு சிறிய தொகுப்பே இதற்குப் பின் உள்ள அட்டையில் இறப்பிற்க்கு பின் உள்ள வாழ்வைப் பற்றி மேலும் விளக்கமாக நீங்கள் அறிந்து கொள்வதற்காக வேற வேற தலைப்பில் உள்ள புத்தகங்களின் க்யூ ஆர் கோடு (QR Code) உங்களுக்கு இலவசமாக கொடுக்கப்பட்டுள்ளது நீங்கள் அவற்றை ஸ்கேன் செய்து மேல் அதிகமாக தெரிந்து கொள்ளுங்கள்

"இறைவன் நம் அனைவருக்கும் நேர்வழி காட்டுவானாக!"

குறிப்பு:

சகோதர, சகோதரிகள் கவனத்தில் கொள்ள வேண்டும். குர்ஆன் வசனங்களில், கட்டுரையில் மற்றும் இஸ்லாமிய உலகம் உபயோகப்படுத்தும்.

"அல்லாஹ்"

என்னும் சொல் ஒரே இறைவனைக் குறிக்கும் அரபி மொழி வார்த்தை முஸ்லிம்களுக்கான தனிக் கடவுள அல்ல.

முன்னுரை

அகில உலகத்தையும் படைத்து பரிபாலிக்கும் அந்த ஏக இறைவன் முதல் மனிதனாகிய **ஆதாம்** மற்றும் அவருடைய மனைவியாகிய **ஏவாள்** அவர்கள் இருவரையும் படைத்ததற்குப் பிறகு மூன்று முக்கிய அடிப்படை **கட்டளைகளைக்** கொண்டே இந்த மனித குலத்தை இதுவரை இறைவன் வழி நடத்திக் கொண்டு வந்திருக்கிறான்

அந்த **மூன்று** முக்கிய **கட்டளைகள்** என்னவென்று பார்த்தால்;

1) கட்டளை நம்பர் ஒன்று: **ஏகத்துவம்**

அகில உலகங்களையும் படைத்து பரிபாலிக்கும் அந்த ஏக இறைவன் ஒருவனை மட்டுமே வணங்க வேண்டும்.

2) கட்டளை நம்பர் இரண்டு: **தூதுத்துவம்**.

இறைவன் மனித உருவில் உலகத்திற்கு வரமாட்டான். அது அவனுக்கு தகுமானதல்ல.

இதுதான் நாம் முதலில் விளங்க வேண்டிய முக்கியமான உண்மை. அதற்கு பதிலாக தான் படைத்த மனித குலத்திலேயே சிறந்த ஒருவரை இறைவனே தூதராக தேர்ந்தெடுக்கிறான். (எப்படி நாம் வகுப்பில் கிளாஸ் லீடரை தேர்ந்தெடுக்குறோமோ அதன்படி) அவர் மூலமாக இறைவன் தன் கட்டளைகளை மனித குலத்திற்கு அனுப்புவான்.

தூதர் ஏன்?

அந்த தூதர்கள் அனைவருமே சாதாரண மனிதர்களே! அவரவர்கள் வாழும் சமுதாயத்திற்காக அவர் இறைவன் கட்டளையிட்ட பிரகாரம் **1. "இறைவனை மட்டுமே வணங்க வேண்டும்"** என்றும் **2. "இறைவனுடைய கட்டளைகளை பின்பற்ற வேண்டும்"** என்று

சொல்வதோடு மட்டுமல்லாமல் அவரே அந்த (தூதரே) கட்டளையை மனிதனாக இருப்பதினால் பின்பற்றி நமக்கு வழி நடத்திக் காட்டுவார். அதற்கு காரணம் **மனிதனால் இறைவன் இட்ட கட்டளைகளை பின்பற்றி நடக்க சாத்தியமானதே** என்பதை நிரூபிப்பதற்காகவே இறைவன் மனிதர்களையே தூதராக தேர்ந்தெடுக்கிறான்.

எந்த தூதரை இறைவன் இந்த உலகத்திற்கு வழிகாட்ட அனுப்பினானோ / தேர்ந்தெடுத்தானோ அந்த தூதரையே நாம் பின்பற்ற வேண்டும் அதாவது அந்த தூதர் காட்டித் தரும் ஏவல், விலக்கல்களை அதாவது 'எதை செய்ய வேண்டும்', 'எதை செய்யக்கூடாது' என்பதை அவரே சொல்லி தந்து அதையே அவரும் பின்பற்றி நமக்கு முன்னுதாரணமாக அவர் நம்மை வழி நடத்துவார். அவரை பின்பற்றி வாழக்கூடிய நாமும் அவர் சொல்லுகிற கட்டளைகளை ஏற்று அவர் விலக்கக்கூடியவைகளை விலக்கி வாழ வேண்டியது இரண்டாவது கட்டளை.

3) கட்டளை நம்பர் மூன்று: **மறுமை** (இறப்பிற்கு பிறகு உள்ள வாழ்க்கை)

நாம் அனைவருமே ஒருநாள் அதாவது நமக்கு குறிப்பிடப்பட்ட தவணை நெருங்கும்போது இறந்து விடுவோம். இந்த உலகத்தில் நாம் அனுப்பப்பட்டதின் நோக்கம்; நாம் பிறந்ததிலிருந்து நமக்கு விதிக்கப்பட்ட இறப்பு வரும் வரை நாம் அந்த ஏக இறைவனை மப்டுமே வணங்கி அவனுடைய கட்டளைகளை (வேதம் + தூதரின் வழிகாட்டுதல்) ஏற்று நடந்தால் இறந்ததற்குப் பிறகு இறைவன் முடிவில்லாத ஒரு உலகத்தில் சொர்க்கத்தை தருவதாகவும், இறைவனை ஏற்க மறுத்தோ (கடவுள் மறுப்புக் கொள்கை) அல்லது இறைவனை வணங்க தவறியோ (தான் தோன்றித்தனமாக, மனோ இச்சையின்படி வாழ்வதினாலோ) அல்லது இறைவன் அல்லாதவர்களை ஆதாரமில்லாமல் வணங்குவதன் மூலமாகவோ (எங்கள் மூதாதையர்கள் எதில் இருக்கக் கண்டோமோ அதையே

பின்பற்றுவோம்) என்று நடப்பதினாலோ நமக்கு இறப்பிற்குப் பிறகு தண்டனையாக நரகத்தை, முடிவில்லாத உலகத்தில் நரகத்தையே சித்தப்படுத்தி வைத்திருக்கிறான் என்பதே அந்த மூன்றாவது முக்கிய கட்டளையாகும்.

அந்த மூன்றாவது கட்டளையான மறுமையை **(இறப்பிற்க்கு பின்பு உள்ள வாழ்வு)** விளக்குவதே இச்சிறிய நூல்.

குறிப்பு: சகோதர, சகோதரிகள் கவனத்தில் கொள்ள வேண்டும். குர்ஆன் வசனங்களில், கட்டுரையில் மற்றும் இஸ்லாமிய உலகம் உபயோகப் படுத்தும். **"அல்லாஹ்"** என்னும் சொல் ஒரே இறைவனைக் குறிக்கும் அரபி மொழி வார்த்தை. தனிக் கடவுள் அல்ல.

1.மனிதனின் ஆசையும், இறப்பும், தெளிவில்லாத செய்திகளும்.

மனிதர்களாகிய நாம் எல்லாம் ஆசைகள் நிறைந்தவர்கள். நம் ஆசைகளை எல்லாம் பூர்த்தி செய்வதற்காகத்தான் அல்லும், பகலும் உழைத்து, உழைத்து நாம் இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

நம் ஆசைகளை எல்லாம் பூர்த்தியாகக் கூடிய அளவுக்கு நெடுநாள் நாம் நீடித்து இந்த உலகில் வாழ்ந்தால் நலமாக இருக்குமே என்று ஒவவொரு மனித உள்ளமும் ஆசைப்படத்தான் செய்கிறது.

ஆனால் நம் ஆசைகளை எல்லாம் பூர்த்தியாகாத நிலையில் நாமும் இந்த உலகத்தை விட்டு எதிர்பாராமல் ஒருநாள் சென்றுவிடுவோமே என்று மனித மனம் ஏங்கத்தான் செய்கிறது.

எதார்த்த உலகம் இந்த மனோநிலையைப் பற்றியெல்லாம் சிறிதும் கவலைப்படாமல் மக்களை மரணத்திள்பால் கொண்டு போய்க் கொண்டிருக்கிறது.

மரணித்த மக்கள் எங்கு செல்கிறார்கள்? என்னதான் நடக்கிறது? என்ற வினாவுக்கு அங்கொன்றும், இங்கொன்றுமாக தெளிவான ஆதாரமில்லாத செய்திகளாக வலம் வரும் சிலவற்றை பார்ப்போம்.

1. பைபிள் தரும் பதில்

a) "மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்." (பிரசங்கி 9:5) சாகும்போது நம் வாழ்க்கை முடிந்துவிடுகிறது.

b) முதல் மனிதன் ஆதாம் இறந்தபோது அவன் மண்ணோடு மண்ணாகிப் போனான். (ஆதியாகமம் 2:7-3:19) அதேபோல, இறந்துபோகும் எல்லாருமே ஒன்றுமில்லாமல் ஆகிவிடுகிறார்கள். (பிரசங்கி 3:19,20.)

c) உயிர்த்தெழுப்பப்படுவார்கள் [அதாவது, உயிரோடு வருவார்கள்] (அப்போஸ்தலர் 24:15.)

d) சாவு என்பது தூக்கத்தைப் போன்றது என்று பைபிள் சொல்கிறது. (யோவான் 11:11-14) தூக்கத்தில் இருந்து ஒருவரை நாம் எழுப்புவது போல, இறந்துபோனவர்களை கடவுளால் எழுப்ப முடியும்.(யோபு 14:13-15.)

e) இறந்துபோன சிலரை, கடவுள் மறுபடியும் உயிரோடு கொண்டுவந்ததற்கு பைபிளில் ஆதாரம் இருக்கிறது. அதனால், இறந்தவர்கள் நிச்சயம் ஒரு நாள் மறுபடியும் உயிரோடு வருவார்கள் என்று நம்மால் உறுதியாக சொல்ல முடியும். 1 இராஜாக்கள் 17:17-24; லூக்கா 7:11-17; யோவான் 11:39-44. (w16-E-No.1).

2. பகவத் கீதை தரும் பதிலாக சொல்லப்படுபவைகள்.

பகவத் கீதையில் பகவான் கிருஷ்ணர் கூறுகிறார், "பற்பல பிறவிகளுக்குப் பிறகு, புத்திசாலி மனிதன் என்னிடம் சரணடைகின்றான், வாஸுதேவனான நானே எல்லாம் என்பதை உணர்கிறான்." தற்போதைய மக்கள் மரணத்திற்குப் பின்னர் மறுபிறவி உள்ளது என்பதை நம்புவதில்லை, ஆயினும், நீங்கள் நம்புகிறீர்களா, இல்லையா, என்னும் கேள்விக்கு இடமே இல்லை. உண்மை உண்மையாகவே இருக்கும். மரணத்திற்குப் பிறகு மறுபிறவி நிச்சயம் உண்டு. உடல் அழியும்போது நீங்கள் அழிந்துவிடுவதில்லை; நீங்கள் மற்றோர் உடலை ஏற்கிறீர்கள்.

இறந்த பிறகு ஆவியாகவோ மறுஜென்மம் எடுத்தோ உயிர் வாழ்வதாக சிலர் நினைக்கிறார்கள். வேறு சிலர், இறந்துவிட்டால் நம் வாழ்க்கை அதோடு முடிந்துவிட்டது, அவ்வளவுதான் என்று நினைக்கிறார்கள்.

3. மற்ற பிற கொள்கைகளை கொண்ட மக்களின் நிலை.

பிறக்கிறோம், நம் இஷ்டப்படி நாம் வாழ்ந்து சில காலம் கடந்து பிறகு நாம் இறக்கிறோம். அவ்வளவுதான் என்று இதற்க்குமேல் அவர்களிடம் சொல்ல ஒன்றுமில்லாததால் அத்தோடு முடித்துக் கொள்கிறார்கள்.

மேற் சொன்ன அனைத்தையும் ஊன்றி கவனித்தால், முன்னுக்கு பின் முரணாக சிலவும், ஒரு செய்தியை சொல்வது போல் மற்றவைகளும் எந்த ஒரு ஆதாரம் இல்லாமல் மனிதனின் இறப்புப் பற்றியும், அதன்பின் என்ன நடக்கும் என்பதை தெளிவாக்காமலே முடித்துக் கொள்கின்றன.

இந்த கோட்பாடுகளை பின்பற்றும் உலகின் பெரும்பான்மையான மக்களும் அதிகம் அலட்டிக் கொள்ளாமல் ஏதோ வாழும் காலம் வரைக்கும் ஜாலியாக வாழனும் என்று வாழ்க்கையின் ஓட்டத்துக்கு முடிந்தும், முடியாமலும் தங்களை அர்ப்பணித்துக் கொள்கிறார்கள்.

இந்நிலையில் தன்னுடைய குடும்பத்தை சார்ந்நதவர்களோ, அல்லது அக்கம் பக்கமாக வசிக்கும் மக்களிடையே யாருக்காவது எதிர் பாராத விதமாக மரணம் சம்பவித்தால், உடனே மனது மரணம் பற்றி சிந்திக்கத் தொடங்குகிறது.

ஜாலியாக வாழும் காலமெல்லாம் ஏன் பிறந்தோம்? ஏன் வாழுகிறோம்? எங்கு செல்வோம்? என்று மரணத்தைப் பற்றி கண்டு கொள்ளாத மனது, வாழ்க்கையில் நெருக்கடி, சிரமங்கள் என்று நடக்கும் போது, நாம் ஏன் பிறந்தோம்? எதற்க்காக வாழகிறோம? என்பதோடு மட்டுமல்லாமல் இவ்வளவு சிரமங்களோடு நாம் ஏன்தான் இந்த உலகத்தில் வாழனும் என்று தங்கள் வாழ்க்கையையும் (தற்கொலையில்) முடித்து கொள்ளவதையும் நாம் காணலாம்.



2. மரணத்திற்க்கு பிறகு வாழ்வு உண்டா? உயிர்ப்பித்தல் சாத்தியமா?

உயிர்ப்பித்தல் சாத்தியமா?

மனிதன் மரணித்து மண்ணோடு மண்ணாகி விடுகிறான். அவனது எலும்புகள் உட்பட அனைத்தும் அழிந்த பின்னர் அவன் எப்படி திரும்பவும் உயிர் கொடுக்கப்பட்டு எழுப்பப்படுவான்? இது சாத்தியமில்லையே? என்ற கேள்வியை மரணத்திற்கு பின் வாழ்வு இல்லை என்று கூறுபவர்கள் எழுப்புவர்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் (1450 வருடங்களுக்கு முன்) வாழ்ந்த இறை மறுப்பாளர்களும் இதுபோன்ற கேள்விகளை நபி (ஸல்) அவர்களிடம் கேட்டனர்.

எலும்புகள் மக்கிய நிலையில் அதை யாரால் உயிர்ப்பிக்க இயலும்? என்று மனிதன் கேட்கிறான். (குர்ஆன் 36:78)

நாங்கள் எலும்புகளாகவும், மக்கிய பொருள்களாகவும் ஆன பின்பு புதிய படைப்பாக எழுப்பப்படுவோமா என்ன? என்று அவர்கள் கேட்கின்றனர். (குர்ஆன் 17:49)

நிச்சயமாக நீங்கள் மரணித்து மண்ணாகவும் எழும்பாகவும் ஆன பின்னால் நீங்கள் (மீண்டும்) வெளிப்படுத்தப்படுவீர்கள் என்று அவர் உங்களை எச்சரிக்கிறாரா? நீங்கள் எச்சரிக்கப்படுவது வெகு தூரம்! வெகு தூரம்! நமது இவ்வுலக வாழ்வைத் தவிர வேறு வாழ்க்கை இல்லை. நாம் வாழ்ந்து மடிகிறோம். மீண்டும் நாம் எழுப்பப்பட போகிறவர் அல்ல (எனக் கூறுகின்றனர்). (குர்ஆன் 23:35-37)

நாம் நிச்சயமாக மண்ணறைகளிலிருந்து எழுப்பப்படுவோமா? மக்கி எலும்புகளாக நாங்கள் ஆகிவிட்டாலுமா? என்று அவர்கள் கேட்கின்றனர். (குர்ஆன் 79:10,11)

அவனது எலும்புகளை நாம் ஒன்று சேர்க்கவே மாட்டோம் என்று மனிதன் நினைத்துக் கொண்டிருக்கிறானா? (குர்ஆன் 75:3)

இறந்தவன் உயிர்ப்பிக்கப்படுவதும் அவன் விசாரிக்கப்படுவதும் சாத்தியமே இல்லை என்று நபி (ஸல்) காலத்தில் வாழ்ந்த இறை நிராகரிப்பாளர்கள் கருதி வந்ததை இந்த வசனங்கள் கூறுகின்றன.

கடவுள் ஒருவன் இருப்பதையும், அவன் சர்வ சக்தியுள்ளவன் என்பதையும், மனிதனிடம் காணப்படும் பலவீனங்கள் எதுவும் அவளிடம் இருக்காது என்பதையும் நம்பக் கூடியவர்களுக்கு மரணித்தவனை மீண்டும் கடவுள் எழுப்புவது அவனுக்கு சிரமம் இல்லை என்பதை எளிதாக விளங்க முடியும்.

மண்ணோடு மண்ணாக மக்கிப்போனவைகளை உருவாக்க மனிதனால் முடியாதுதான். கடவுளின் நிலைமையும் அதுதான் என்றால், அப்படி ஒரு கடவுள் நமக்கு தேவையே இல்லை **நமக்கெல்லாம் முடியாததை எவனால் செய்ய முடியுமோ அவன் தான் கடவுள் என்பதே இஸ்லாத்தின் இறை கோட்பாடு.**

கடவுளைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்துவிட்டால் மறுமை சொர்க்கம் நரகம் ஆகியவற்றை நம்புவது மிகச் சாதாரணமானவை.

மனிதன் பிறப்பதற்கு முன்னால் இவ்வுலகில் இருக்கவில்லை. வேறு எங்கேயும் இருக்கவில்லை. எந்த பொருளாகவும் இருக்கவில்லை. ஒன்றும் இல்லாத நிலையில் இருந்து

மனிதனைப் படைத்த இறைவன் மீண்டும் ஒன்றும் இல்லாமல் மனிதனை ஆக்கிவிட்டு படைப்பது இறைவனுக்கு சிரமமான ஒன்றா? ஒரு பொருளை முதலில் படைப்பது தான் சிரமமானது. அதை அழித்துவிட்டு உருவாக்குவது அவ்வளவு சிரமமானது அல்ல.

ஒரு தொலைக்காட்சியையோ, ஒரு கம்ப்யூட்டரையோ உருவாக்குவதற்கு மனிதனுக்கு பல வருடங்கள் தேவைப்பட்டிருக்கும். உருவாக்கிய பின் அது போன்ற லட்சக்கணக்கில் உருவாக்குவது சிரமமானதல்ல.

மரணித்த பின் மனிதனை உயிர் கொடுத்து எழுப்ப முடியும் என்பதை நிரூபிக்க இந்த பதிலையே இறைவன் அல்குர்ஆனில் பல இடங்களில் சொல்லிக் காட்டுகிறான்.

மேலும் மனிதன் தான் படைக்கப்பட்டதை மறந்து விட்டு நமக்கு உதாரணம் கூறுகிறான். எலும்புகள் மக்கிப்போன நிலையில் அதை அவனால் உயிர்ப்பிக்க முடியுமா? என்று அவன் கூறுகிறான். முதன்முதலில் எவன் அவற்றை படைத்தானோ அவனே அவற்றுக்கு உயிர் கொடுப்பான். அவன் அனைத்து படைப்புகளையும் பற்றியும் நன்கு அறிந்தவன் என்று (நபியே) நீர் கூறும். (குர்ஆன் 36:78,79)

(நபியே) நீர் கூறும். நீங்கள் கல்லாகவோ இரும்பாகவோ ஆகுங்கள். அல்லது மிகப் பெரியதான உங்கள் நெஞ்சங்கள் தோன்றும் வேறு ஒரு படைப்பாய் ஆகுங்கள். (எப்படியாயினும் நிச்சயமாக நீங்கள் எழுப்பப்படுவீர்கள்) எங்களை எவன் (மறுபடியும்) எழுப்புவான்? என்று

அவர்கள் கேட்கின்றனர். உங்களை எவன் முதலில் படைத்தானோ அவன் தான் என்று (நபியே) நீர் கூறும். (குர்ஆன் 17:50,51)

குறிப்பிட்டு சொல்லப்படும் ஒரு பொருளாக (கூட) இல்லாத ஒரு காலம் மனிதனுக்கு இருந்ததில்லையா? நாமே மனிதனை சோதிப்பதற்காக கலப்பு விந்து துளியிலிருந்து அவனை நாம் படைத்தோம். அவனைக் கேட்பவனாகவும், பார்ப்பவனாகவும் ஆக்கினோம். (குர்ஆன் 76:1,2)

அவனே முதன் முதலாக முதன்முறையாக படைத்தான் பிறகு அவனே அதை மறுமுறையும் படைப்பான் இது அவனுக்கு மிகவும் எளிதானதே (குர்ஆன் 30:27)

அதிக கனம் உள்ள பொருளை சுமக்கும் ஆற்றல் பெற்றவனுக்கு கனமில்லாத பொருளைச் சுமப்பது சிரமமானதல்ல.

500 கிலோ எடையுள்ள பொருளை சாதாரணமாக சுமந்து கொண்டிருக்கும் ஒருவனிடம் 50 கிலோ எடையை தூக்க முடியுமா? என்று கேட்பது அறிவற்ற கேள்வி. மனிதனை விட பிரம்மாண்டமான வானம், பூமி, மலைகள், கடல்கள் இவற்றையெல்லாம் படைத்த சர்வ சக்தி உள்ள இறைவனிடம் மனிதனை படைக்க முடியுமா? என்று கேட்பதும் இது போன்றது தான். இந்த பதிலையே மரணத்திற்குப் பின் உயிர்ப்பித்தல் சாத்தியமே என்பதை நிரூபிக்க இறைவன் எடுத்து சொல்கிறான்.

மேலும்,

படைக்கப்படுவதில் நீங்கள் கடினமானவர்களா? அல்லது வானமா? அதை அவன் நிறுவினான்..

அதன் முகத்தை உயர்த்தி சீராக்கினான் அதன் இரவை மூடி பகலை வெளிப்படுத்தினான். இதன் பின்னர் பூமியை விரித்தான். அதிலிருந்து தண்ணீரையும் மேய்ச்சல் பயிர்களையும் வெளிப்படுத்தினான். மலைகளை முளைகளாக நாட்டினான். (குர்ஆன் 79:27-32)

ஒட்டகம் எவ்வாறு படைக்கப்பட்டது என்று அவர்கள் பார்த்த வேண்டாமா? வானம் எவ்வாறு உயர்த்தப்பட்டுள்ளது என்று அவர்கள் பார்க்க வேண்டாமா? மேலும் மலைகள் எவ்வாறு ஊன்றப்பட்டுள்ளது என்றும் பூமி எவ்வாறு விரிக்கப்பட்டுள்ளது என்பதையும் பார்க்க வேண்டாமா? (குர்ஆன் 88:17-20)

மரணத்திற்கு பின் உயிர்ப்பித்தல் சாத்தியமே என்பதை பல சான்றுகளை அற்புதங்களை நினைவூட்டி மனிதன் இதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை என்று பின்வரும் வசனங்களில் அல்லாஹ் மனிதனின் சிந்தனையை தோன்றுகின்றான்.

நாம் இப்பூமியை தொட்டிலாக ஆக்கவில்லையா? மலைகளை முளைகளாக ஆக்கவில்லையா? உங்களை ஜோடி ஜோடியாக படைத்தோம் உங்களின் தூக்கத்தை இளைப்பாறுதலாக ஆக்கினோம் இன்னும் இரவை உங்களுக்கு ஆடையாக ஆக்கினோம் பகலை வாழ்க்கை வசதிகளைத் தேட ஏற்றதாக ஆக்கினோம். உங்களுக்கு மேல் பலமான ஏழு வானங்களை நாம் அமைத்தோம் ஒளி வீசும் விளக்கையும் ஏற்படுத்தினோம். கார்மேகங்களிலிருந்து மழையை

இறக்கினோம் அதன் மூலம் தானியங்களையும் தாவரங்களையும் அடர்ந்த சோலைகளையும் ஏற்படுத்தினோம். (குர்ஆன் 78:6-16)

மரணித்த பின் உயிர்ப்பித்தல் சாத்தியமே என்பதை நிரூபிக்க இந்த கேள்விகளை இறைவன் பதிலாக தருகிறான்.



3. மறு பிறவி உண்டா? உயிர்ப்பித்தல் சாத்தியமா?

மனிதன் இறந்த பிறகு ஏழு ஜென்மங்களுக்கு மறுபிறவி எடுக்கிறான். மனிதன் நல்லவனாக இருந்தாலும், கெட்டவனாக இருந்தாலும் அது அவனுடைய முந்தைய ஜென்மத்தின் பலனே என்று சிலர் கூறுகின்றனர். மனிதன் மட்டுமல்ல, மிருகங்கள் கூட மறு ஜென்மம் எடுக்கிறதாம்.

நாம் மனிதனாக வாழும் போது ஏதாவது ஒரு மிருகத்தை கொடுமைப்படுத்தினால் மறு ஜென்மத்தில் நாம் மிருகமாகவும் அது மனிதனாகவும் மாறி நம்மை அதை கொடுமைப்படுத்தும் என்று இவர்கள் கூறுகின்றனர். மனிதன் முதல் ஜென்மத்தின் பலனை மறு ஜென்மத்தில் அனுபவிக்கிறான் என்பதை இவர்களின் வாதம்.

ஒரு மனிதன் செய்த பாவத்துக்காக அவனை தண்டிக்க வேண்டுமானால், தண்டனையை பெறக் கூடியவன் நமது தவறுக்காகவே நாம் தண்டிக்கப்படுகிறோம் என்பதை உணரக்கூடிய நிலையில் இருக்க வேண்டும். அதுதான் அவனை நல்லவனாக வாழ வைக்கும்.

உதாரணமாக, ஒருவன் திருடி விடுகிறான். அதன் பிறகு அவன் பைத்தியமாகி விடுகிறான் திருடியதற்காக அவனை தண்டித்தால் அதை அவனால் உணர முடியுமா? உணர முடியாமல் இருப்பவனுக்கு தண்டனை கொடுப்பது எந்த விதத்திலும் அவனுக்கு பலனளிக்காது என்றே மனித அறிவு கூறுகிறது.

மறுபிறவி எடுப்பவன் முற்பிறவியில் எப்படி இருந்தோம் என்பதை தெரிந்து வைத்திருந்தாலேயே இப்பிறவியில் தன் தவறை உணர்ந்து நல்லவனாக வாழ்வான் இப்போது துன்பப்படும் எவருக்காவது முற்பிறவியில் நாம் எப்படி இருந்தோம் என்று தெரியுமா? நிச்சயமாக தெரியாது அப்படியானால் அவன் அடுத்த பிறவியைப் பற்றி கவலைப்பட்டு எப்படி நல்லவனாக வாழ முடியும்?

முற்பிறவியில் நடந்ததை உணர முடியாத நிலையில் இருப்பவனை இறைவன் எப்படி தண்டிப்பான்? அது நியாயமான தண்டனையா?

மனிதன் நல்லவனாக வாழ்வதற்கு மறுபிறவி என்ற சித்தாந்தம் எந்த வகையிலும் உதவாது.



4. "இஸ்லாம்"

- நம்மின் பிறப்பை பற்றியும்,
- நம்மின் வாழ்வைப் பற்றியும்,
- எவ்வளவு நாள் இவ்வுலகத்தில் வாழ்வோம் என்பதைப் பற்றியும்,
- மரணத்தைப் பற்றியும்,
- மரணதின போது (நல்லவர்கள், கெடடவர்கள்) உயர் எப்படி பறிக்கபபடும் என்பது பற்றியும்,
- மரணத்திறக்கு பின் எப்படி அடக்கம் செய்யப்பட வேண்டும் என்பது பற்றியும்,
- அடக்கம் செய்யாமல், எரிப்பவர்களுக்கு என்ன நடக்கும் என்பது பற்றியும்,
- மண்ணறையில் (சவக்குழியில்) என்ன நடக்கும் என்பது பற்றியும்,
- மணணறையின் (நல்லவர்கள், கெட்டவர்களின்) வாழக்கை எப்படிப் பட்டதாக இருக்கும் என்பது பற்றியும்.
- மண்ணறை வாழ்வுக்கு பின், இவ்வுலகில் நாம் வாழ்ந்த காலத்தில் நடந்தவைகளுக்கு (Data Retrieval & Enquiry) இறைவனுடைய கேள்விகளுக்கு "மறுமை நாளில்" பதில் சொல்ல வேண்டும் என்றும்,
- வலக்கையில் Report card கொடுக்கப்பட்டவர் சொர்க்கத்திற்க்கும்,
- இடக்கையில் Report card கொடுக்கப்பட்டவர்

நரகத்திற்க்கும் அனுப்பப்படுவார்கள் என்பது பற்றியும்,

- **சொர்க்க வாழ்வு முடிவில்லாத நீண்டதாகவும்,**
- **அதே போல் நரக வாழ்வும் முடிவே இல்லாத நீண்டதாகவும்,இருக்கும் என தெளிவாக, ஆதாரங்களுடன் படைத்த இறைவனாலேயே 1450 ஆண்டுகளுக்கு முன்பே விவரிக்கிறது.**

குர்ஆனை வாங்கி முழுமையாக படித்து தெளிவு பெறுங்கள்.

இலவச குர்ஆனுக்கு இந்த நம்பருக்கு **+91 88388 92393** வாட்ஸப் செய்தி அனுப்பவும் அல்லது போன் பண்ணவும்.

மேலும் உடனே படிக்க **Free Quran QR code** பின்னால் கொடுக்கப்பட்டுள்ளது. டவுன் லோடு செய்து படிக்கவும்.

5. "இஸ்லாம்" சொல்லும் அந்த சில விபரங்களை தெரிந்து கொள்வதற்க்கு முன்;

முதல் மனிதனான ஆதாமையும், ஏவாளையும் படைத்ததற்கு பின் இறைவன் **மூன்று கட்டளைகளை** முன்னிறுத்திதான் மக்களை அன்றி (உலகம் படைக்கப்பட்டது)-லிருந்து இறைவன் வழி நடத்துகிறான்.

1. படைத்த அந்த **ஒரே இறைவனையே (ஏகத்துவம்)** வணங்க வேண்டும் என்றும்;
2. இறைவன் தேர்ந்தெடுத்த **தூதர் (ஏவல், விலக்கல்) களையே பின்பற்ற வேண்டும் (தூதுத்தவம்)** என்றும்;
3. இந்த இரண்டையும் பின்பற்றினால் நாம் மரணித்த பிறகு, இந்த கட்டளையை ஏற்று நடப்பவர்களுக்கு **சொர்க்கமும், இதை ஏற்று நடக்காதவர்களுக்கு நரகமும் கூலியாக** மண்ணறை மற்றும் மறுமை (மரணத்திற்க்கு பின் உள்ள வாழ்வில்)யில் வைத்திருக்கிறான் என்பதே அந்த மூன்று கட்டளைகள்.

முதல் மனிதனை இறைவன் தோற்றுவித்ததிலிருந்து இன்று வரை, மட்டுமல்லாமல உலகம் அழியும் வரை இந்த மூன்று முக்கிய கொள்கைகளை முன்னிறுத்தியே நம் வாழ்வு அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் முதலில் விளங்க வேண்டும். தெளிவு இதிலிருந்துதான் ஆரம்பிக்கிறது சகோதர சகோதரிகளே!

இதற்குப் பிறகு,

அன்றிலிருந்து இன்று வரை அதாவது உலகத்தில் முதல் மனிதனை இறைவன் தோற்றுவித்ததிலிருந்து இப்பொழுது நீங்கள் இந்த புத்தகத்தை படிக்கும் இன்று வரை, அது மட்டுமல்லாமல்,

உலகம் அழியும் வரை இந்த மூன்று முக்கிய கொள்கைகளை முன்னிறுத்தியே உலகம் இயங்குகிறது, இன்னும் இயங்கும்.

இப்போது **மக்களும் அன்றிலிருந்து முதல் மனிதனை தோற்றுவித்ததிலிருந்துதற்சமயம்வரைமக்கள்அனைவருமே (முழு உலகமும்) இரண்டு பிரிவுகளாகவே இருக்கிறார்கள். நாம் நினைப்பது போல் உலகத்தில் எண்ணற்ற பிரிவுகள் அல்ல என்பதையும் நாம் விளங்க வேண்டும்.**

அதாவது அந்த ஒரு இறைவனை மட்டுமே வணங்கி அவன் அனுப்பிய தூதர்களை பின்பற்றுபவர்கள் எல்லாருமே **ஒரு பகுதியாகவும் (One side)** மற்ற எல்லாருமே, அதாவது இறைவனே இல்லை என்று சொல்பவர்களும், எங்கள் மூதாதையர்களை எதில் இருக்கக் கண்டோமோ அதை பின்பற்றியே நாங்கள் வணங்குகிறோம் என்று சொல்பவர்களும், இறைத்தூதரையே கடவுளாக வணங்குபவர்களும், தான்தோன்றித்தனமாக என் மனது என்ன நினைக்கிறதோ அதையே செய்வேன் என்பவர்கள் எல்லாருமே **அடுத்த பிரிவுகளாக (other side)** இருக்கிறார்கள்.

இந்த உண்மையை நீங்கள் கண்டிப்பாக புரிந்து தெளிவு பெற வேண்டும்.

(ஏகத்துவம், தூதுத்துவம் பற்றிய மேலதிக விளக்கங்களை முன் கவரின் உள் அட்டையில் கொடுக்கபபட்டிருக்கும் QR Code-ஐ பயன்படுத்தி டவுன் லோடு செய்து படித்து தெளிவு பெறவும்).



6.குர்ஆனும், நபிகள் நாயகம் அவர்களின் பொன் மொழிகளும்

குர்ஆனும், நபிகள் நாயகம் பொன் மொழிகளும் **அசைக்க முடியாத (unquestionable evidences) ஆதாரங்களாக** உங்களுக்கு **மண்ணறை மற்றும் மறுமை - மரணத்திற்க்கு பின் உள்ள வாழ்வு** பற்றி எடுத்துரைக்கப் போகிறது.

குர்ஆன் - கடைசி இறை வேதம், உலகம் அழியும் வரைக்கும் இதற்க்கு பின் வேதம் வராது. இன்றிலிருந்து 1450 வருடங்களுக்கு முன் கொஞ்சம் கொஞ்சமாக 23 வருடங்களாக முஹம்மது நபிக்கு அருளப்பட்டது. **மொத்தம் 114 அத்தியாயங்கள், 6,666 வசனங்கள்**. மாற்றங்களுக்கு உள்ளாகாதது.

- **அமெரிக்காவில ஒரு குர்ஆன எடுத்தாலும் சரி,**
- **இந்தியாவுல ஒரு குர்ஆன எடுத்தாலும் சரி,**
- **ஆப்பிரிக்கால ஒரு குர்ஆன எடுத்தாலும் சரி,**
- **ஆஸ்திரேலியாவுல ஒரு குர்ஆன எடுத்தாலும் சரி,**
- **ஜஸ்லாந்துல ஒரு குர்ஆன எடுத்தாலும் சரி,**
- **மேலும் உலகத்தின் எந்த மூலை முடுக்கில ஒரு குர்ஆன எடுத்தாலும் சரி,**

மேற்கண்ட **114 அத்தியாயம், 6,666 வசனங்களேயே** பார்க்கலாம்.

எப்படி சாத்தியம்? என்று திகைப்பீர்களானால் **கடைசி இறை வேதம்** என்பதனால் இறைவனே இதை பாதுகாக்க பொருப்பேற்பதாக குர்ஆனிலேயே ஒரு வசனம்.

> **நிச்சயமாக நாம் தான் (நினைவூட்டும்) இவ்வேதத்தை (உம்மீது) இறக்கி வைத்தோம்; நிச்சயமாக நாமே அதன் பாதுகாவலனாகவும் இருக்கின்றோம். (குர்ஆன் 15:9)**

உலகளாவிய நிலையில் சில கோடி மக்கள் முழுக் குர்ஆனை யும் மனப்பாடமாக கொண்டிருக்கிறார்கள் என்பது மேலதிக தகவல் உங்களுக்காக!

நபிகள் நாயகம் இறுதி இறைத் தூதர். உலகம் (ஆதாம்) தோன்றியதிலிருந்து எண்ணற்ற தூதர்களும், வேதங்களும் இறைவனால் அனுப்பப்பட்டிருக்கிறது. அதில் கடைசியாக வந்த தூதர் தான் முஹம்மது (ஸல்). நாற்பதாவது வயதில் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டு 23 ஆண்டுகளில் குர்ஆன் கொஞ்சம் கொஞ்சமாக அருளப்பட்டு, அதன் பிரகாரம் உலகில் வாழ்ந்து காட்டி தன்னுடைய 63 வது வயதில் இறைவன் நாட்டப்படி மரணித்தவர்கள். அவர்கள் இறைவன் கட்டளைப்படி சொன்ன பொன் மொழிகள், எந்த வொரு சின்ன, சின்ன விசயமானாலும் அதையும் கவனத்தில் கொண்டு நம்முடைய முழு வாழ்க்கையும் இறைவனின் கட்டளைப் பிரகாரம் வாழ்வது சாத்தியமே என்று நம் அனைவரையும் அச்சரம் பிசகாமல் வாழ வழி வகுத்தவர்கள்.

இனி **குர்ஆன்**, மற்றும் **நபிகள் நாயகம்** பொன் மொழிகள் மூலம் நம்முடைய **மண்ணறை மற்றும் மறுமை** அதாவது **மரணத்திற்க்கு பின்** உள்ள வாழக்கையை பார்ப்போம்.



7. நம்மின் பிறப்புப் பற்றி (குர்ஆனும், நபிகள் பொன்மொழியும்)

(குர்ஆன் 23:12)

நிச்சயமாக நாம் (ஆதி) மனிதரைக் களி மண்ணிலிருந்துள்ள சத்தினால் படைத்தோம்.

(குர்ஆன் 23:13)

பின்னர் நாம் (மனிதனைப் படைப்பதற்காக) அவனை ஒரு பாதுகாப்பான இடத்தில் இந்திரியத் துளியாக்கி வைத்தோம்.

(குர்ஆன் 23:14)

பின்னர் அந்த இந்திரியத் துளியை அலக் என்ற நிலையில் ஆக்கினோம்; பின்னர் அந்த அலக்கை ஒரு தசைப் பிண்டமாக்கினோம்; பின்னர் அத்தசைப்பிண்டத்தை எலும்புகளாகவும் ஆக்கினோம்; பின்னர், அவ்வெலும்புகளுக்கு மாமிசத்தை அணிவித்தோம்; பின்னர் நாம் அதனை வேறு ஒரு படைப்பாக (மனிதனாகச்) செய்தோம். (இவ்வாறு படைத்தவனான) அல்லாஹ் பெரும் பாக்கியமுடையவன் - (படைப்பாளர்களில் எல்லாம்) மிக அழகான படைப்பாளன்.

(குர்ஆன் 23:15)

பிறகு, நிச்சயமாக நீங்கள் மரணிப்பவர்களாக இருக்கிறீர்கள்.

(குர்ஆன் 23:16)

பிறகு, கியாம (மறுமை) நாளன்று, நிச்சயமாக நீங்கள் எழுப்பப்படுவீர்கள்.

(குர்ஆன் 26:184)

"அன்றியும், உங்களையும், உங்களுக்கு முன்னாலிருந்த படைப்புகளையும் படைத்த அவனுக்கே அஞ்சுங்கள்" (எனக் கூறினார்.)

(குர்ஆன் 17:70)

நிச்சயமாக, நாம் ஆதமுடைய சந்ததியைக் கண்ணியப்படுத்தினோம்; இன்னும், கடலிலும், கரையிலும் அவர்களைச் சுமந்து, அவர்களுக்காக நல்ல உணவு(ம் மற்றும்) பொருட்களையும் அளித்து, நாம் படைத்துள்ள (படைப்புகள்) பலவற்றையும் விட அவர்களை (தகுதியால்) மேன்மைப் படுத்தினோம.

(குர்ஆன் 36:79)

"முதல் முதலில் அவற்றை உண்டு பண்ணியவனே (பின்னும்) அவற்றுக்கு உயிர் கொடுப்பான். அவன் எல்லாவகைப் படைப்புகளையும் நன்கறிந்தவன்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

(குர்ஆன் 98:6)

நிச்சயமாக வேதக்காரர்களிலும் முஷ்ரிக்கு (இணை வைத்து வணங்குபவர்)களிலும்

எவர்கள் நிராகரிக்கிறார்களோ அவர்கள் நரக நெருப்பில் இருப்பார்கள் - அதில் என்றென்றும் இருப்பார்கள் - இத்தகையவர்கள்தாம் படைப்புகளில் மிகக் கெட்டவர்கள் ஆவார்கள்.

(குர்ஆன் 98:7)

நிச்சயமாக, எவர்கள் ஈமான் (ஓர் இறைவனை நம்பிக்கை) கொண்டு, ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்கிறார்களோ, அவர்கள் தாம் படைப்புகளில் மிக மேலானவர்கள்.



8. நம்மின் வாழ்வைப் பற்றி குர்ஆனும், நபிகள் அவர்களின் பொன் மொழிகளும்

(குர்ஆன் 67:2)

உங்களில் எவர் செயல்களால் மிகவும் அழகானவர் என்பதைச் சோதிப்பதற்காக அவன், மரணத்தையும் வாழ்வையும் படைத்தான்; மேலும், அவன் (யாவரையும்) மிகைத்தவன்; மிக மன்னிப்பவன்.

(குர்ஆன் 6:29)

அன்றியும், "இவ்வுலகத்தில் நாம் வாழ்ந்திருப்பதைத் தவிர (அப்பால் மறுமை வாழ்வு என்று) ஒன்றும் இல்லை; நாம் (மரணத்திற்குப் பின் மறுபடியும்) எழுப்பப் பட மாட்டோம்" என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

(குர்ஆன் 7:10)

(மனிதர்களே!) நிச்சயமாக நாம் உங்களை பூமியில் வசிக்கச் செய்தோம்; அதில் உங்களுக்கு வாழ்க்கை வசதிகளையும் ஆக்கித்தந்தோம் - எனினும் நீங்கள் நன்றி செலுத்துவதோ மிகவும் சொற்பமேயாகும்.

(குர்ஆன் 7:35)

ஆதமுடைய மக்களே! உங்களிடம் உங்களிலிருந்தே (நம்) தூதர்கள் வந்து, என் வசனங்களை உங்களுக்கு விளக்கினால், அப்போது எவர்கள் பயபக்தி கொண்டு (தம் வாழ்க்கையில்) திருந்திக் கொண்டார்களோ

அவர்களுக்கு அச்சமுமில்லை; அவர்கள் துக்கப்படவுமாட்டார்கள்.

(குர்ஆன் 57:20)

அறிந்து கொள்ளுங்கள் "நிச்சயமாக இவ்வுலக வாழ்க்கை விளையாட்டும், வேடிக்கையும், அலங்காரமுமேயாகும்; மேலும் (அது) உங்களிடையே பெருமையடித்துக் கொள்வதும்; பொருள்களையும், சந்ததிகளையும் பெருக்குவதுமேயாகும்; (இது) மழையின் உதாரணத்துக்கு ஒப்பாகும்; (அதாவது) அது முளைப்பிக்கும் பயிர் விவசாயிகளை ஆனந்தப் படுத்துகிறது; ஆனால், சீக்கிரமே அது உலர்ந்து மஞ்சள் நிறம் ஆவதை நீர் காண்கின்றீர்; பின்னர் அது கூளமாகி விடுகிறது; (உலக வாழ்வும் இத்தகையதே; எனவே உலக வாழ்வில் மயங்கியோருக்கு) மறுமையில் கடுமையான வேதனையுண்டு; (மூஃமின்களுக்கு - ஓரிறைவனை மட்டுமே வணங்கி, கட்டளையை பின்பற்றி வழிபடுபவர்களுக்கு) அல்லாஹ்வின் மன்னிப்பும், அவன் பொருத்தமும் உண்டு - ஆகவே, இவ்வுலக வாழ்க்கை ஏமாற்றும் சொற்ப சுகமே தவிர (வேறு) இல்லை.



9.மரணத்தைப் பற்றி குர்ஆனும், நபிகளின் பொன் மொழிகளும்

இவ்வுலகில் பிறக்கின்ற மனிதர்கள் மற்றும் எல்லா ஜீவராசிகளும் மரணத்தை சந்தித்தே ஆக வேண்டும். மரணம் வராத ஒரு பிராணியோ உயிரோ இல்லவே இல்லை.

"நீங்கள் எங்கிருந்தபோதிலும் உங்களை மரணம் அடைந்தே தீரும்; நீங்கள் மிகவும் உறுதியாகக் கட்டப்பட்ட கோட்டைகளில் இருந்த போதிலும் சரியே!" (குர்ஆன் 4:78)

ஒருவன் மரணித்த பிறகு அவன் மக்கி மண்ணோடு மண்ணாகி விடுகிறான். எனவே, மரணித்தபின் ஒரு வாழ்வே இல்லை என்று நாத்திகர்கள் கூறி வருகிறார்கள்.

முதல் மனிதர் ஆதம் முதல் இன்று வரை இனி உலகம் அழியும் வரை மரணத்தைத் தழுவாத மனிதர்களே இல்லை என்று உறுதியாக கூறலாம்.

இறைவனை ஏற்க மறுத்தவர்கள், தங்களை கடவுள் எனக் கூறியவர்கள், கொடுங்கோல் ஆட்சி புரிந்தவர்கள், இறைச்சட்டங்களை மீறியவர்கள், செல்வமும் செறுக்கும் கொண்டவர்கள், அக்கிரமும் புரிந்தவர்கள் எவரும் மரணத்தை விட்டும் தப்பியதில்லை. இனி இதுபோன்று நடப்பவர்களும் நிச்சயமாக தப்பப் போவதுமில்லை.

இறைவனை ஏற்க மறுத்தவர்கள், மரணத்தைத் தழுவியது போன்று இறைவனுக்கு விருப்பமான காரியங்களைச் செய்தவர்களும், ஏன்? இறைத்தூதர்களும், நபிமார்களும் கூட மரணத்தை தழுவினார்கள். ஈஸா நபியைத் தவிர, அவர்களும் இனி மரணிப்பார்கள்.

மனிதர்களில் யாராக இருந்தாலும் அவர்கள் மரணம்

அடைந்தே தீர வேண்டும். நாத்திகர்கள் கூட மறுக்க முடியாத ஒன்று மரணம்!

மனிதர்கள் அனைவரும் மரணம் அடைவார்கள் என்பதில் எவரிடமும் மாற்று கருத்து இருக்க முடியாது.

மனிதன் மரணித்த பிறகு அவனுடைய நிலைமை என்ன? என்பதில்தான் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன.

ஒருவன் இறந்த பிறகு மறு பிறவி உண்டு. ஏழு ஜென்மங்கள் இப்படி மறுபிறவியை மனிதன் பெறுகிறான் முதல் ஜென்மத்தில் அவன் நல்லவனாக வாழ்ந்திருந்தால் மறு ஜென்மத்தில் மனிதனாகவும், கெட்டவனாக வாழ்ந்திருந்தால் மிருகமாகவோ அல்லது வேறு ஒரு பொருளாகவோ மாறிவிடுவான் என்று ஒரு சாரார் கூறுகின்றனர்.

இன்னும் சிலர் பிறக்கின்ற மனிதர்கள் அனைவரும் பாவியாகவே பிறக்கின்றனர். அவர்கள் அனைவரும் செய்யும் பாவங்களையும் ஒருவர் சுமந்து கொண்டு உள்ளார். இறந்த பிறகு ஒரு வாழ்வு உண்டு. அந்த வாழ்வின் போது எவரும் பாவியாக இருக்க மாட்டார்கள். அனைவருக்கும் மன்னிப்பு உண்டு. சுவனம் உண்டு என்று கூறுகின்றனர்.

இறைவன் இவை அனைதது அனுகூலங்களை தவிடு பொடியாக்கி மரணித்த மனிதன் திருப்பி எழுப்பப்படுவான் என்பதை குர்ஆன் ஆணித்தரமாக சொல்லுகிறது.

இன்னும் அவன்தான் உங்களை வாழச் செய்கிறான்; பிறகு அவனே மரணம் அடையச் செய்கிறான். அதன் பின்னர் அவனே உங்களை உயிர்ப்பிப்பவன் (எனினும்) நிச்சயமாக மனிதன் நன்றிகெட்டவனாக இருக்கிறான். (குர்ஆன் 22:66)

"அல்லாஹ் உங்களுக்கு உயிர் கொடுக்கிறான்; பின்னர் அவனே உங்களை மரணம் அடையச் செய்கிறான்; பின்னர் கியாம நாளன்று அவன் உங்களை ஒன்று சேர்ப்பான் - இதில் சந்தேகமேயில்லை" எனினும் மனிதரில் பெரும்பாலோர் (இதை) அறியமாட்டார்கள் என்று (நபியே!) நீர் கூறும். (குர்ஆன் 45:26)

"நீங்கள் எதை விட்டும் விரண்டு ஓடுகிறீர்களோ, அந்த மரணம் நிச்சயமாக உங்களை சந்திக்கும்; பிறகு, மறைவானதையும் பகிரங்கமானதையும் நன்கறிந்தவனிடம் நீங்கள் கொண்டு மீட்டப்படுவீர்கள் - அப்பால், அவன் நீங்கள் செய்து கொண்டிருந்தவை பற்றி உங்களுக்கு அறிவிப்பான்" (என்று) (நபியே!) நீர் கூறுவீராக. (குர்ஆன் 62:8)

ஒருவன் மரணித்த பிறகு அவன் மக்கி மண்ணோடு மண்ணாகி விடுகிறான். எனவே, மரணித்தபின் ஒரு வாழ்வே இல்லை என்று நாத்திகர்கள் கூறி வருகிறார்கள்.

மனிதன் இறந்த பிறகு மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பப்படுவான் அதன் பிறகு ஒரு திரை மறைவு வாழ்க்கை உண்டு. அதில் அவனது உலக வாழ்க்கை குறித்து அவன் விசாரிக்கப்படுவான். இந்த உலகம் முழுவதும் ஒரு நாள் அழியும். பிறகு இறைவன் இன்னொரு உலகத்தை படைப்பான். முதல் மனிதர் முதல் கடைசி மனிதர் வரை இறந்து போன அனைவரும் இறைவன் முன்னிலையில் வந்து விடுவர். அவர்களின் நற்செயல் புரிந்தவர்களுக்கு சுவனத்து இன்பமும் - சொர்க்கமும், தீமை புரிந்தோருக்கு நரகத்து வேதனையும் - நரகமும், இறைவனால் வழங்கப்படும் என்று இஸ்லாம்

கூறுகிறது.

மறு உலக (மறுமை) வாழ்வை பற்றிய நம்பிக்கைதான் இஸ்லாத்தின் ஆணிவேராகவும் அஸ்திவாரமாகவும் அமைந்துள்ளது. அதுதான் உண்மையும் கூட.



10.இறந்த பின் ஆரம்பிக்கும் மண்ணறை வாழ்க்கை

முந்தைய வசனங்களில் கண்டது போல் மரணம் விதிக்கப்பட்ட ஒருவர் நடைமுறையில் இருக்கும் பழக்கத்திற்கு ஏற்ப 1) அடக்கம் செய்யப்படுகிறார், அல்லது 2) எரிக்கப்படுகிறார். எந்நிலையாயினும் மரணித்த ஒருவனுக்கு மண்ணறை வாழ்க்கை உண்டு என்று இறைவனும் இறைத்தூதர் நபி (ஸல்) அவர்களும் உறுதிப்படுத்தி உள்ளார்கள்.

உலகில் நாம் செய்கின்ற நன்மைகளுக்கு முழுமையான பரிசும் தீமைகளுக்கு முழுமையான தண்டனையும் மறுமையில் தான் கிடைக்கவிருக்கிறது. மண்ணறை மறுமை வாழ்வின் முதல் நிலை என்பதால் நல்லவர்களுக்கான பரிசும், தீயவர்களுக்கான தண்டனையும் இங்கிருந்து தான் ஆரம்பமாகிறது.

இறந்தவர்கள் தாங்கள் செய்த செயல்களுக்குரிய கூலியை மண்ணறை வாழ்வில் பெற்றுக் கொண்டிருப்பதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இறந்தோரை ஏசாதீர்கள். ஏனெனில் அவர்கள் தாம் முற்படுத்தியவைகளின்பால் சென்று சேர்ந்து விட்டார்கள். (ஆதாரம்: ஆயிஷா (ரலி) நூல் புகாரி 1393)

மண்ணறை நிலையே மறுமையின் நிலை:

மண்ணறை வாழ்க்கை நல்லதாக அமைந்துவிட்டால் மறுமை வாழ்க்கையும் நன்றாகவே அமைந்துவிடும் ஆனால் மண்ணறை வாழ்க்கை சோகத்திற்குரியதாகவும் வேதனைக்குரியதாகவும் அமைந்து விட்டால் மறுமை வாழ்க்கை அதைவிட வேதனைக்குரியதாக அமைந்து விடும் எனவே சந்தோஷமான மண்ணறை வாழ்வை பெறுவதற்கு நாம் முயற்சி

பண்ண வேண்டும்.

அதன் அடிப்படை **படைத்த அந்த ஒரே இறைவனை வணங்க வேண்டும்** என்பதும், **இறைத் தூதர் காட்டித் தந்த வழிமுறையில்** நடக்கவேண்டும் என்பதே!

உயிரைக் கைப்பற்றும் வானவர்கள்:

ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது உயிரை கைப்பற்றுவதற்கு வானவர்கள் இருப்பதாக குர்ஆன் கூறுகிறது.

"உங்களுக்கென நியமிக்கப்பட்ட மரணத்திற்குரிய வானவர் உங்களை கைப்பற்றுவார். பின்னர் உங்கள் இறைவனிடம் திரும்பக் கொண்டு வரப்படுவீர்கள்" என்று கூறு வீராக. (குர்ஆன் 32:11)

தமக்குத்தானே தீங்கிழைத்துக் கொண்டோரின் உயிர்களை வானவர்கள் கைப்பற்றும்போது "நீங்கள் எந்த நிலையில் இருந்தீர்கள்?" என்று கேட்பார்கள். "நாங்கள் பூமியில் பலவீனர்களாக இருந்தோம்" என்று அவர்கள் கூறுவார்கள். "அல்லாஹ்வின் பூமி விசாலமானதாக இல்லையா? அதில் நீங்கள் ஹிஜ்ரத் (இடம்பெயர்ந்து) செய்திருக்கக் கூடாதா?"என்று கேட்பார்கள். அவர்கள் தங்குமிடம் நரகம். அது கெட்ட தங்குமிடமாகும் (குர்ஆன் 4:97)

தமக்கத்தாமே தீங்கு இழைத்தோரை வானவர்கள் கைப்பற்றும் பொழுது "நாங்கள் எந்த கேடும் செய்யவில்லை" என்று அவர்கள் சமாதானம் பேசுவார்கள். அவ்வாறில்லை!

நீங்கள் செய்து கொண்டிருந்தவற்றை அல்லாஹ் அறிந்தவன். "நரகத்தின் வாசல்கள் வழியாக நுழையுங்கள்! அதில் நிரந்தரமாக தங்குவீர்கள்" (என்று கூறப்படும்) பெருமையடித்தோரின் தங்குமிடம் மிகவும் கெட்டது. (குர்ஆன் 16:28)

அவர்களின் முகங்களிலும் பின்புறத்திலும் அடித்து வானவர்கள் அவர்களை கைப்பற்றும்பொழுது எப்படி இருக்கும்? (குர்ஆன் 47:27)

"அல்லாஹ்வை விட்டுவிட்டு நீங்கள் யாரை அழைத்துக் கொண்டிருந்தீர்களோ அவர்கள் எங்கே?" என்று நமது தூதர்கள் அவர்களைக் கைப்பற்ற அவர்களிடம் வரும் பொழுது கேட்பார்கள். "அவர்கள் எங்களை விட்டும் மறைந்து விட்டனர்" என அவர்கள் கூறுவார்கள். (குர்ஆன் 7:37)

அவனே தனது அடியார்கள் மீது ஆதிக்கம் செலுத்துபவன். உங்களுக்குப் பாதுகாவலர்களை அவன் அனுப்புகிறான். எனவே உங்களில் ஒருவருக்கு மரணம் ஏற்படும் பொழுது நமது தூதர்கள் அவர்களை அவரைக் கைப்பற்றுகிறார்கள். அவர்கள் (அப்பணியில்) குறைவைக்க மாட்டார்கள். (குர்ஆன் 6:61)

11. மண்ணறை தண்டனைக்கான காரணங்கள்

உயிருடன் இருக்கும் போது செய்த பாவங்களுக்காக மண்ணறையில் தண்டனை தரப்படுகிறது. ஒவ்வொரு நாளும் ஏராளமான பாவமான காரியங்களை மனிதன் சம்பாதித்து கொண்டிருக்கின்றான். இந்தப் பாவங்களை மன்னித்து அருள் புரியுமாறு ஏக இறைவனிடம் - அல்லாஹ்விடம் நாம் பிரார்த்தனை செய்ய வேண்டும். நம்மால் முடிந்த அளவு பாவமான காரியங்களில் ஈடுபடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். குற்றம் புரிந்து விட்டால் மனம் வருந்தி இறைவனிடம் பாவ மன்னிப்பு கேட்டிட வேண்டும். உலகில் புரிந்த குற்றங்களுக்கு மண்ணறையில் வேதனை தரப்படுவதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் இறந்தவர் தன் வாழ்நாளில் புரிந்த சிறிய பெரிய பாவங்களின் காரணத்தால் வேதனை செய்யப்படுகின்றார். அவருடைய குடும்பத்தினரோ இப்பொழுது அவருக்காக அழுது கொண்டிருக்கிறனர். **(அறிவிப்பவர்: உர்வா பின் சுபைர் (ரலி) நூல் : புகாரி 3978)**

வழிகெட்ட கொள்கையை பின்பற்றுதல்:

பாவமான காரியங்கள் அனைத்தும் தண்டனையை பெற்று தரக்கூடியதாக இருந்தாலும், அதி முக்கியமான பெரும் பாவங்களாக கருதப் படுபவைகளான;

1. **இறைவனே இல்லை என்று மறுத்து தான் தோன்றித்தனமாக வாழ்பவர்கள்;**
2. **இறைவன் அல்லாதவற்றை இறைவனாக வணங்குபவர்கள்;**
3. **எங்களுடைய மூதாதையர்கள் எதில் இருக்க கண்டமோ அதையே நாங்கள் பின்பற்றுவோம் என்று**

சிந்திக்காமல், ஆராயாமல் மூட நம்பிக்கையின் அடிப்படையில் வணங்குபவர்களும் வாழ்பவர்களும்;

4. இறைச் செய்தியை கொண்டு வந்த தூதர்களையே கடவுளாக வணங்குபவர்கள்

மேற்கண்டவைகளே கொடூரமான மண்ணறைத் தண்டனைக்கான மிகக் முக்கிய காரணங்கள்.

இறைச் சட்டமான **குர்ஆன்** மற்றும் **நபி (ஸல்)** அவர்களின் பொன்மொழிகள் , இந்த இரண்டை மட்டும் மூல ஆதாரமாகக் கொள்ளாமல் மற்றவர்களின் கருத்துக்களையும் புதுமையான விஷயங்களையும் எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் வாழ்க்கை நெறியாக கொண்டு செயல்படுவதே மக்களிடையே இன்று பழக்கமாக இருந்து வருகிறது.

குர்ஆன் மற்றும் **நபி (ஸல்)** பொன்மொழிகள் மட்டுமே பின்பற்ற வேண்டும் என்ற நேரான கொள்கையை ஏற்று இதைத்தவிர உள்ள அனைத்து வழிகெட்ட கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்தால் மண்ணறை வாழ்க்கையில் தண்டனையிலிருந்து தப்பிக்கலாம். இல்லையென்றால் மண்ணறை வாழ்க்கை நரக வாழ்க்கையாக இருக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இதுதான் ஆதாரப் பூர்வமான உண்மையும் கூட.

அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஓர் அடியாரின் உடலை சவக்குழியில் அடக்கம் செய்துவிட்டு, அவருடைய தோழர்கள் திரும்பும் போது அவர்களது செருப்பின் ஓசையை பிரேதம் செவியேற்கும். அதற்குள் இரண்டு வானவர்கள் அவனிடம் வந்து, அவனை எழுப்பி உட்கார வைத்து, "முஹம்மத் எனும் இந்த மனிதரைப் பற்றி நீ என்ன கருதிக் கொண்டிருந்தாய்?" எனக் கேட்பர் நிராகரிப்பவனாகவோ, நயவஞ்சகனாகவோ, இருந்தால்

கேள்வி கேட்கப்பட்டதும் "எனக்குத் தெரியாது; மக்கள் சொன்னதையே நானும் சொல்லிக் கொண்டிருந்தேன்" என்பான். அப்போது அவனிடம் நீயாக எதையும் அறிந்ததும் இல்லை. (குர்ஆனை) ஓதி(விளங்கி)யதுமில்லை என்று கூறப்படும். பிறகு இரும்பாலான சுத்தியால் அவனது இரு காதுகளுக்கும் இடையே (பிடரியில்) ஒரு அடி கொடுக்கப்படும். அப்போது மனிதர்கள் ஜின்களைத் தவிர மற்ற அனைத்தும் செவியேற்குமளவுக்கு அவன் அலறுவான். (அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) புகாரி 1338)

யூதர்களாக மரணித்தால் மண்ணறையில் யூதர்கள் வேதனை செய்யப்படுவதாக **நபி (ஸல்)** அவர்கள் தெளிவுபடுத்தினார்கள்.

(ஒரு முறை) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் சூரியன் மறைந்த பின் வெளியே புறப்பட்டார்கள். அப்போது ஒரு சப்தத்தைக் கேட்டுவிட்டு, "யூதர்கள் அவர்களின் கல்லறையில் வேதனை செய்யப்படுகிறார்கள்" என்று கூறினார்கள். (அறிவிப்பாளர் அபு அயூப் (ரலி) முஸ்லிம் 5504)

இறை வேதத்தை அலட்சியப்படுத்துதல்:

இறைவன் வகுத்த சட்ட திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு நாம் வாழ வேண்டும் என்பதற்காக அல்லாஹ் நமக்கு குர்ஆனையும் இறுதி இறைத் தூதர் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையையும் தந்துள்ளான். இவ்விரண்டின் அடிப்படையில் வாழ்ந்தவர் மண்ணறையிலும் மறுமையிலும் வெற்றி பெறுவார். ஆனால் இந்த உபதேசத்தை காதில் வாங்காமல் அலட்சியப்படுத்தி மரணிப்பவருக்கு மண்ணறையில் நெருக்கடியான வாழ்க்கை கொடுக்கப்படுகிறது.

எனது போதனையைப் புறக்கணிப்பவனுக்கு நெருக்கடியான வாழ்க்கை உண்டு. அவனை மறுமை நாளில் குருடனாக எழுப்புவோம். (குர்ஆன் 20: 124)

எனது போதனையைப் புறக்கணிப்பவனுக்கு நெருக்கடியான வாழ்க்கை உண்டு. அவனை மறுமை நாளில் குருடனாக எழுப்புவோம். (20:124) என்ற வசனத்தில் (சொல்லப்பட்ட தண்டனை) மண்ணறை வேதனையை பற்றியதாகும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அறிவிப்பவர்: அபுஹுரைரா (ரலி) இப்னு ஹிப்பான் 3174)

எனது போதனையைப் புறக்கணிப்புக்கு நெருக்கடியான வாழ்க்கை உண்டு. அவனை மறுமை நாளில் குருடனாக எழுப்புவோம் (20:124) என்ற இந்த வசனம் எது குறித்து இறங்கியது என்று உங்களுக்குத் தெரியுமா? நெருக்கடியான வாழ்க்கை என்றால் எது என்று உங்களுக்குத் தெரியுமா? என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (மக்களிடம்) கேட்டார்கள். அதற்கு மக்கள் அல்லாஹ்வும் அவனது தூதருமே மிக அறிந்தவர்கள் என்று கூறினார்கள். இறை மறுப்பாளன் (மற்றும் இணை வைப்பவன்) அவனுடைய மண்ணறையில் வேதனை செய்யப்படுவதை (இவ்வசனம் குறிப்பிடுகிறது). எனது உயிர் எவனது கைவசத்தில் இருக்கிறதோ அந்த அல்லாஹ்வின் மீது ஆணையாக அவனுக்கெதிராக 99 பாம்புகள் சாட்டப்படும். அந்த பாம்புகளைப் பற்றி உங்களுக்கு தெரியுமா? அவை 99 பாம்புகளாகும். ஒவ்வொரு பாம்புகளுக்கும் ஏழு தலைகள் இருக்கும். மறுமை நாள் வரை அவனுடைய உடம்பில் (விஷக்காற்றை) அவை ஊதிக் கொண்டும் அவனைத் தீண்டிக் கொண்டும் உராய்ந்து கொண்டும் இருக்கும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர் அபுஹுரைரா (ரலி) முஸ்னது அபியஃலா 6504)

12. மண்ணறைத் தண்டனைக்கான மற்ற பாவங்களில் சில.

1) புறம் பேசுதல்:

இன்றைக்கு பாவம் என்று உணரப்பட்டு அதிகமானோரால் செய்யப்பட்டுவரும் குற்றம் புறம் பேசுவதாகும். புறம் பேசியதற்காக ஒருவன் மண்ணறையில் தண்டிக்கப்படுகின்றான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

வேதனை செய்யப்பட்டுக் கொண்டிருந்த இருவருடைய அடக்க ஸ்தலங்களை கடந்து நபி (ஸல்) அவர்கள் சென்ற பொழுது "இவ்விருவரும் வேதனை செய்யப்படுகிறார்கள்; ஆனால் மிகப்பெரும் பாவத்திற்காக வேதனை செய்யப்படவில்லை. ஒருவர் சிறுநீர் கழிக்கும்போது மறைக்காதவர்; இன்னொருவர் கோள் சொல்லித் திரிந்தவர்". என்று கூறிவிட்டு ஈரமான ஒரு பேரிச்ச மட்டையை இரண்டாகப் பிளந்து இரு அடக்ஸ்தலங்களிலும் ஒவ்வொன்றாக நட்டார்கள். தோழர்கள், "அல்லாஹ்வின் தூதரே! ஏன் இவ்வாறு செய்கின்றீர்கள்?" என்று கேட்டதும், இவ்விரண்டின் வீரம் காயாத வரை இவர்களின் வேதனை குறைக்கப் படக்கூடும் என்ற நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி) நூல் புகாரி 1381)

2) சிறுநீர் கழித்துவிட்டு சுத்தம் செய்யாமல் இருத்தல்:

மலமும் சிறுநீரும் மனிதனின் உடம்பிலிருந்து வெளிப்படும் அசுத்தங்களாகும். ஆனால் மலம் கழித்தால் மக்கள் சுத்தம் செய்கிறார்கள் சிறுநீர் கழித்தால் சுத்தம் செய்யாமல் விட்டுவிடுகிறார்கள்.

சிறுநீரை தூய்மையான தண்ணீரைப் போன்று நினைத்துக்

கொண்டிருக்கிறார்கள். தூய்மைப்படுத்திக் கொள்வதற்கு நீர் கிடைத்தாலும் நீரை பயன்படுத்தி சுத்தம் செய்கிற அளவிற்கு சிறுநீர் ஒன்றும் பெரிய அசுத்தம் இல்லை என்று கருதுகிறார்கள்.

ஆனால் உண்மையில் மலத்திலிருந்து துர்வாடை கிளம்புவது போல் சிறுநீரில் இருந்தும் துர்வாடை கிளம்புகிறது மலத்தில் நோய்க்கிருமிகள் இருப்பது போல் சிறுநீரிலும் நோய்க்கிருமிகள் இருக்கிறது.

எனவே தான் இவ்விரண்டு அசுத்தங்களையும் சுத்தம் செய்ய வேண்டும் என்று இஸ்லாம் வலியுறுத்துகிறது. சுத்தம் செய்யாவிட்டால் மண்ணறையில் தண்டனை கிடைக்கும் என்று எச்சரிக்கிறது. **சிறுநீர் விஷயத்தில் மட்டுமில்லாமல் எல்லா காரியங்களிலும் நாம் சுத்தத்தை கடைபிடிக்க வேண்டும்.**

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இரண்டு அடக்கஸ்தலங்களை கடந்து சென்றார்கள். அப்போது அடக்கஸ்தலத்தில் உள்ள இவ்விருவரும் வேதனை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பெரிய பாவத்திற்காக இவர் தண்டிக்கப்படவில்லை. அவர்களில் ஒருவர் சிறுநீர் கழித்து விட்டு தூய்மை செய்து கொள்ளாதவராக இருந்தார் மற்றவர் கோள் சொல்லி நடப்பவராக இருந்தார். என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அறிவிப்பாளர் : அப்பாஸ் (ரலி), நஸயீ 2042)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். மண்ணறை வேதனையில் அதிகமானது சிறுநீர் (கழித்து விட்டு சுத்தம் செய்யாமல்) இருப்பதால் ஏற்படுகிறது.

(அறிவிப்பாளர்:அபு ஹுரைரா, இப்னுமாஜா 342)

3) மறைவிடத்தை மற்றவர் பார்க்குமாறு நடந்து கொள்ளுதல்:

எந்த ஒரு செயலாக இருந்தாலும் அதில் அழகான ஒழுங்கு முறைகளை பேண வேண்டும் என்று இஸ்லாம் கற்றுத் தருகிறது. மல ஜலம் கழிக்கும் போது பிறர் நமது மறைவிடத்தை பார்க்காதவாறு இயற்கை தேவையை நாம் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்று இஸ்லாம் கட்டளையிடுகிறது. ஆனால் இன்றைக்கு பலர் இந்த ஒழுங்கு முறையை கடைபிடிக்காமல் மக்கள் நடமாடிக் கொண்டிருக்கும் தெருக்களில் எந்த மறைப்பும் இல்லாமல் எல்லோரும் பார்க்கும் விதத்தில் சிறுநீர் கழிக்கிறார்கள். இவ்வாறு செய்வது குற்றமாகும்.

இப்படி நடந்து கொள்பவர்களுக்கு மண்ணறையில் தண்டனை கிடைக்கும் என்று **நபி (ஸல்)** அவர்கள் கூறினார்கள்.

வேதனை செய்யப்பட்டுக் கொண்டிருந்த இருவருடைய அடக்க ஸ்தலங்களை கடந்து நபி (ஸல்) அவர்கள் சென்ற பொழுது "இவ்விருவரும் வேதனை செய்யப்படுகிறார்கள்; ஆனால் மிகப்பெரும் பாவத்திற்காக வேதனை செய்யப்படவில்லை. ஒருவர் சிறுநீர் கழிக்கும்போது மறைக்காதவர்; இன்னொருவர் கோள் சொல்லித் திரிந்தவர்". என்று கூறிவிட்டு ஈரமான ஒரு பேரிச்ச மட்டையை இரண்டாகப் பிளந்து இரு அடக்ஸ்தலங்களிலும் ஒவ்வொன்றாக நட்டார்கள். தோழர்கள், "அல்லாஹ்வின் தூதரே! ஏன் இவ்வாறு செய்கின்றீர்கள்?" என்று கேட்டதும், இவ்விரண்டின் வீரம் காயாத வரை இவர்களின் வேதனை குறைக்கப் படக்கூடும் என்ற நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி) நூல் புகாரி 1381)

3) திருட்டு:

திருடப்படுகின்ற பொருள் திருடியவனுக்கு நெருப்பாக மாறும் என்று நபி (ஸல்) அவர்கள் பின்வரும் சம்பவத்தில் உணர்த்தி உள்ளார்கள் நாங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் "கைபர்" தினத்தன்று (போரில் வெற்றி கண்டு) புறப்பட்டோம். நாங்கள் (அந்த போரில்) பொன்னையோ வெள்ளியையோ போர்ச் செல்வமாக பெறவில்லை. (அவையல்லாத கால்நடைச்) செல்வங்கள், ஆடைகள் உபயோகப் பொருட்கள் ஆகியவற்றையே பெற்றோம். 'பனுள்ளுபைப்' எனும் குலத்தில் 'ரஃபா பின் ஸைத்' என்ற ஒருவர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு 'மித்அம்' எனப்படும் ஒரு அடிமையை அன்பளிப்பாக வழங்கினார்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்)அவர்கள் 'வாதில் குரா' எனும் இடத்தை நோக்கிச் சென்று, அந்த இடத்திற்கு வந்து சேர்ந்த போது 'மித்அம்' என்ற அந்த அடிமை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் சிவிகையை (ஒட்டகத்திலிருந்து) இறக்கிக் கொண்டிருந்தார். அப்போது எங்கிருந்தோ வந்த அம்பு ஒன்று மித்அம்மை(த் தாக்கி)க் கொன்று விட்டது. இதைக் கண்ட மக்கள் "அவருக்கு சொர்க்கம் கிடைத்துவிட்டது; வாழ்த்துக்கள்" என்றனர். உடனே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் "அப்படி சொல்லாதீர்கள். என்னுயிர் எவன் கையிலுள்ளதோ அவன் மீது சத்தியமாக! போர்ச் செல்வங்கள் பங்கிடப்படும் முன்பே அவற்றிலிருந்து கைபர் (போர் நடைபெற்ற இடம்) அன்று அவர் எடுத்துக் கொண்டு விட்ட போர்வை அவர் மீது நரக நெருப்பாக எரிந்து கொண்டிருக்கிறது" என்று கூறினார்கள். இதை மக்கள் செவியற்றபோது, ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் 'ஒரு செருப்பு வாரை' அல்லது 'இரு வார்களைக்' கொண்டு வந்தார் அப்போது நபி (ஸல்) அவர்கள் "(இதை திருப்பித் தராமல்

இருந்திருந்தால் இது சாதாரண செருப்பு வாராக இருந்திராது மாறாக) நெருப்பு வாராக அல்லது இரு நெருப்பு வார்களாக மாறியிருக்கும்" என்று கூறினார்கள்.

(அறிவிப்பாளர் அபுஹுரைரா (ரலி) புகாரி 6707)

5) அவதூறு கூறுதல், வட்டி வாங்குதல், விபச்சாரம் புரிதல்:

அவதூறு கூறுதல், குர்ஆனை புறக்கணித்தல், விபச்சாரம் செய்தல், வட்டி வாங்குதல் போன்ற குற்றங்களுக்கும் மண்ணறையில் தண்டனை தரப்படுவதாக நபி (ஸல்) அவர்களுக்கு கனவின் மூலம் காட்டப்பட்டது.

நபி ஸல் அவர்கள் தொழுது முடித்ததும் எங்களை நோக்கி "இன்றிரவு உங்களில் யாரும் கனவு கண்டீர்களா?" என்று கேட்கும் வழக்கமுடையவர்களாக இருந்தார்கள். யாராவது கனவு கண்டு அதை கூறினால் "அல்லாஹ் நாடியது நடக்கும்" என்று கூறுவார்கள். இவ்வாறே ஒரு நாள், "உங்களில் யாரும் இன்றிரவு கனவு கண்டீர்களா?" என்று கேட்டதும் நாங்கள் "இல்லை" என்றோம். அவர்கள் நான் இன்றிரவு ஒரு கனவு கண்டேன் அதில் இருவர் என்னிடம் வந்து எனது கையை பிடித்து என்னை புனித பூமி ஒன்றுக்கு அழைத்துச் சென்றனர் அங்கே ஒருவர் உட்கார்ந்திருந்தார். நின்று கொண்டிருந்த இன்னொருவரின் கையில் இரும்பாலான கொக்கிகள் இருந்தன. அவர் அதைக் கொண்டு உட்கார்ந்திருப்பவரின் கீழ் தடையின் ஒருபுறம் குத்த அது அவருடைய பிடரி வழியாக வெளியேறியது இப்படியே தாடையின் இன்னொரு புறமும் செய்தார் இதற்குள் தாடையின் முதல் பகுதி ஒழுங்காகி விட்டது. பின்பு இது குத்தப்பட்டதும் அது பழைய நிலையை அடைந்தது உடனே நான் "இது என்ன?" என்று கேட்டேன் அதற்கு அவ்விருவரும் "நடங்கள்" என்றனர்.

அப்படியே நடந்தபோது அங்கு ஒரு மனிதர் மல்லாந்து படுத்து இருந்தார். அவரது தலைமாட்டில் பெரிய பாறையுடன் நிற்கும் இன்னொருவர் அதை கொண்டு அவரது தலையை உடைத்தார். அவ்வாறு உடைக்கும் போது பாறை உருண்டு ஓடி விட்டது. அந்தப் பாறையை அவர் எடுத்து வருவதற்குள் சிதைந்த தலை பழைய நிலைக்கு மாறிவிட்டது மீண்டும் வந்து உடைத்தார் உடனே "இவர் யார்?" என நான் கேட்டேன். அதற்கு அவர் இருவரும் "நடங்கள்" என்றனர். எனவே நடந்தோம். அங்கு அடுப்பு போன்ற ஒரு பொந்து இருந்தது. அதன் மேற்பாகம் குறுகலாகவும், அடிப்பாகும் விசாலமானதாகவும் இருந்தது அதற்கு கீழே நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. நெருப்பின் கூடு அதிகமாகும் போது அந்த பொந்தின் அடியில் உள்ளவர்கள் வெளியேற முயன்றார்கள். (ஆனால் மேற்பகுதி குறுகலா இருப்பதால் வெளியேற முடியவில்லை). நெருப்பு அணைந்ததும் பழைய (கீழ்ப்)பகுதிக்கு வந்து விட்டார்கள். அதில் ஆண்களும் பெண்களும் நிர்வாணமாக கிடந்தார்கள் நான் "இவர்கள் யார்?" என கேட்டேன். அதற்கும் அவர்கள் "நடங்கள்" எனக் கூறிடவே மேலும் நடந்து ஒரு இரத்த ஆற்றின் பக்கம் வந்தோம். அந்த ஆற்றின் நடுப்பகுதியில் ஒருவர் நின்று கொண்டிருந்தார் அவருக்கு முன்பாக கற்கள் கிடந்தன. ஆற்றின் ஓரத்தில் இன்னொருவர் நின்று கொண்டிருந்தார். அந்த மனிதர் ஆற்றை விட்டு வெளியேற முயலும் போது இவர் அவரது வாயில் கல்லை எறிந்தார். அக்கல் பட்டதும் கரையேற முயன்றவர் முன்னிருந்த இடத்திற்கு தள்ளப்பட்டார். இவ்வாறே அவர் வெளியேற முயலும் போதெல்லாம் இவர் அவரது வாயில் கல்லால் அடிக்க அவர் மீண்டும் பழைய இடத்திற்கே சென்றார். அப்போது நான் "என்ன இது?" என்று கேட்டேன் அதற்கு அவ்விருவரும் "நடங்கள்" எனக்

கூறிடவே நடந்து ஒரு பசுமையான பூங்காவுக்கு வந்தோம். நான் இருவரிடமும் "இரவு முழுவதும் என்னை நீங்கள் சுற்றிக் காண்பித்தீர்களே, அப்போது நான் கண்டவற்றை பற்றிய விவரங்களை சொல்லுங்கள்?" எனக் கேட்டேன். அதற்கு இருவரும் "ஆம், முதல் தாடை சிதைக்கப்பட்டவரை பார்த்தீரே! அவர் பெரும் பொய்யர். அவர் பொய் பேச அது பலர் வாரியாக உலகம் முழுவதையும் அடையும். நீர் பார்த்த அத்தண்டனை அவருக்கு மறுமை நாள் வரை கொடுக்கப்படும். அடுத்து தலை உடைக்கப்பட்ட நிலையில் பார்த்தீரே! அவருக்கு அல்லாஹ் குர்ஆனை கற்றுக் கொடுத்ததும் அதை பயன்படுத்தாமல் இரவில் தூங்கி விட்டார்; பகலில் அதை செயல்படுத்தவில்லை. எனவே அத்தண்டனை அவருக்கு மறுமை நாள் வரை கொடுக்கப்படும். அடுத்து ஒரு பொந்தில் சிலரைப் பார்த்தீரே! அவர்கள் விபச்சாரத்தை ஈடுபட்டவர்கள். இரத்த ஆற்றை சிலரை ஆற்றில் சிலரைப் பார்த்தீரே! அவர்கள் வட்டி வாங்கி தின்றவர்கள் என்று கூறினார்கள்.

(அறிவிப்பவர் சமூரா பின்த் ஜுன்துப் (ரலி) புகாரி 1386)

மேற்கண்ட குற்றங்களை செய்தவர்களுக்கு மறுமை நாள் வரை தண்டனை தரப்படும் என்று ஹதீஸில் கூறப்பட்டுள்ளது மறுமை நாளுக்கு முன்னால் உள்ள மண்ணறை வாழ்க்கையை பற்றி தான் இச்சம்பம் விவரிக்கிறது என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

6) வாங்கிய கடனை ஒப்படைக்காமல் இருத்தல்:

வாங்கிய கடனை உரியவரிடத்தில் முறையாக ஒப்படைக்காவிட்டால் அது பெரும் குற்றமாகும். கடனை அடைக்காமல் இறந்து விட்டால் இறந்தவரின் உறவினர்கள் அக்கடனை அடைக்க வேண்டும். இல்லாவிட்டால் மரணத்திற்குப் பிறகு கிடைக்கும் பாக்கியங்களை மரணித்தவரால் அனுபவிக்க முடியாத துர்பாக்கியமான நிலை ஏற்படும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இறை நம்பிக்கையாளரின் ஆத்மா அவர் வாங்கிய கடன் காரணத்தால் அவர் சார்பில் அது நிறைவேற்றப்படுகிற வரை (அந்தரத்தில்) தொங்க விடப்படுகிறது.

(அறிவிப்பாளர்: அபுஹுரைரா (ரலி) திர்மிதி 999)

ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள் தொழுதுவிட்டு இங்கே இன்னாருடைய கூட்டத்தாரில் யாராவது (புதைக்கப்பட்டார்களா?) என்று மூன்று முறை கேட்டார்கள். நபி (ஸல்) அவர்களுக்கு யாரும் பதில் கூறவில்லை. இறந்துவிட்ட இந்த மனிதர் தன் மீது இருந்த கடன் காரணத்தால் சொர்க்கத்தை விட்டும் தடுக்கப்பட்டு விட்டார். நீங்கள் விரும்பினால் அவருக்கு பதிலாக நீங்கள் அவரது கடனை நிறைவேற்றுங்கள். இல்லையென்றால் அல்லாஹ்வின் வேதனையின் பால் அவரை ஒப்படைத்து விடுங்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அறிவிப்பாளர் சமூரா பின் ஜுன்துப் (ரலி)
நூல்: மஸானி துஃபிராஸ் 16)

13. நல்லோர்களின் மண்ணறை வாழ்க்கை

சந்தோஷமான செய்தி கூறப்படும்:

நல்லவர்கள் மரணிக்கும் போது வானவர்கள் சந்தோஷமான வார்த்தைகளை அவர்களிடம் கூறுவார்கள். மரியாதையுடன் நடத்தப்படுவார்கள். சொர்க்கம் பரிசாக கிடைக்கப் போகிறது என்ற சுபச் செய்தியை மரணிக்கும் தருவாயில் வானவர்கள் கூறுவார்கள். எனவே தனது நிலை என்னவாகுமோ என்ற கவலை நல்லவர்களுக்கு இருக்காது அவர்கள் நிம்மதியுடனும் சந்தோஷத்துடனும் மண்ணறை வாழ்க்கைக்குள் பிரவேசிப்பார்கள்.

அமைதியுற்ற உயிரே! திருப்தியோடும் (இறைவனால்) திருப்தி கொள்ளப்படும் உமது இறைவனிடம் செல்வாயாக! எனது அடியார்களின் சேர்ந்து கொள்வாயாக! எனது சொர்க்கத்தில் நுழைவாயாக! எனக் கூறப்படும். (குர்ஆன் 89:27)

"எங்கள் இறைவன் அல்லாஹ்வே" எனக் கூறி பின்னர் உறுதியாகவும் இருந்தோரிடம் வானவர்கள் இறங்கி "அஞ்சாதீர்கள்! கவலைப்படாதீர்கள்! உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சொர்க்கம் பற்றிய நற்செய்தியை பெற்றுக் கொள்ளுங்கள்!" எனக் கூறுவார்கள்.

இவ்வுலக வாழ்க்கையிலும், மறுமையிலும் நாங்கள் உங்கள் உதவியாளர்கள். நிகரற்ற அன்புடைய மன்னிப்பவனின் விருந்தாக நீங்கள் ஆசைப்படுபவை உங்களுக்கு கிடைக்கும். நீங்கள் கேட்டதும் உங்களுக்கு உண்டு என்றும் கூறுவர். (குர்ஆன் 41:30-31)

இன்பமான வாழ்வு உறுதி செய்யப்பட்டு விட்டதால் விரைவாக தன்னை அடக்கம் செய்யுமாறு நல்லவர் விரும்புவார். ஆனால் தீயவரோ தனக்கு கிடைத்த கொடூரமான வாழ்வை நினைத்து மண்ணறைக்குள் அடக்கி விட வேண்டாம் என்று அலறிக் கொண்டிருப்பார்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பிரேதம் (பெட்டியில்) வைக்கப்பட்டு அதை ஆண்கள் தங்கள் தோள்களில் தூக்கிச் செல்லும்போது அந்தப் பிரேதம் நல்லறங்கள் புரிந்ததாக இருப்பின், "என்னை விரைந்து கொண்டு செல்லுங்கள்" என்று கூறும். அது நல்லறங்கள் புரியாததாக இருப்பின், கைசேதமே! என்னை எங்கே கொண்டு செல்கிறீர்கள்? என்று கூறும். இவ்வாறு கூறப்படும் செய்தியை மனிதனைத் தவிர அனைத்தும் செவியுறும். மனிதன் அதை செவியுற்றால் மயங்கி விழுந்து விடுவான். இருந்தகடன்காரணத்தால்சொர்க்கத்தைவிட்டும்தடுக்கப்பட்டு விட்டார். நீங்கள் விரும்பினால் அவருக்கு பதிலாக நீங்கள் அவரது கடனை நிறைவேற்றுங்கள். இல்லையென்றால் அல்லாஹ்வின் வேதனையின் பால் அவரை ஒப்படைத்து விடுங்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அறிவிப்பாளர்: அபுஸயீத் அல்குத்ரீ (ரலி), நூல் : புகாரி 1316)

அல்லாவின்தூதர்(ஸல்)அவர்கள்"யார்அல்லாஹ்வை சந்திக்க விரும்புகிறாரோ, அவரைச் சந்திக்க அல்லாஹ்வும் விரும்புகிறான். யார் அல்லாஹ்வைச் சந்திப்பதை வெறுக்கிறாரோ அவரைச் சந்திப்பதை அல்லாஹ்வும் வெறுக்கிறான்" என்று சொன்னார்கள். அப்போது நான், அல்லாஹ்வின் தூதரே! மரணத்தை வெறுப்பதையா (நீங்கள் சொல்கிறீர்கள்)? அவ்வாறாயின், (மனிதர்களாகிய) நாங்கள் அனைவருமே மரணத்தை வெறுக்கத்தானே செய்வோம்?"

என்று கேட்டேன்.

அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "(அல்லாஹ்வை சந்திப்பது என்பதற்கு பொருள்) அதுவல்ல மாறாக, இறை நம்பிக்கையாளருக்கு (மரண வேளையில்) இறைவன் கருணை புரியவிருப்பதாகவும் அவரைப்பற்றி அல்லாஹ் திருப்தி அடைந்திருப்பதாகவும் அவருக்கு சொர்க்கத்தை வழங்கவிருப்பதாகவும் நற்செய்தி கூறப்படும். அப்போது அவர் அல்லாஹ்வை சந்திக்க விரும்புவார். இறை மறுப்பாளருக்கு, (மரணவேளை நெருங்கும் போது) அல்லாஹ் வழங்கவிருக்கும் வேதனை குறித்தும் அவர் மீது அல்லாஹ் கோபம் கொண்டிருப்பது குறித்தும் அறிவிக்கப்படும். அப்போது அவர் அல்லாஹ்வை சந்திப்பதை வெறுப்பார். அல்லாஹ்வும் அவரை சந்திப்பதை வெறுப்பான். என்று (விளக்கம்) சொன்னார்கள்

(அறிவிப்பாளர் ஆயிஷா (ரலி) நூல்: முஸ்லிம் 5208)

நல்லவர்களுக்கு வானவர்களின் வரவேற்பு:

நல்லவர்களுக்கு மண்ணறை வாழ்வில் அழகான வரவேற்பு வானவர்களால்கொடுக்கப்படுகிறது.

மதீனாவாசி ஒருவருடைய பிரேதத்தை பின்தொடர்ந்து நபி (ஸல்) அவர்கள் சென்றார்கள். பிரேதம் அடக்கம் செய்யப்பட்டதும் நபியவர்கள் மண்ணறைக்கு அருகில் அமர்ந்தார்கள். நாங்களும் அவர்களைச் சுற்றி அமர்ந்தோம். நபி (ஸல்) அவர்கள் சிறிய கம்பு ஒன்றினால் நிலத்தை கீறிக் கொண்டிருந்தார்கள் திடீரென தன் தலையை உயர்த்தி மண்ணறை வேதனையை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடிக் கொள்ளுங்கள் என்று மூன்று

தடவை கூறினார்கள். பின்பு மரணத்தருவாயிலுள்ள ஒரு இறைநம்பிக்கையாளனுடைய நிலை பற்றிக் கூறினார்கள்.

மூஃமினான (அல்லாஹ்வை நம்பக்கூடிய) ஒரு அடியான் உலக தொடர்புகளை துண்டித்து விட்டு மறுமையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும்போது சூரிய ஒளிக்கொப்பான பிரகாசமான முகத்துடன் வானிலிருந்து சில வானவர்கள் அவனிடம் வருவார்கள். அவர்கள் தங்களுடன் சுவர்க்கத்து துணிகளையும் சுவர்க்கத்து நறுமணங்களையும் வைத்துக்கொண்டு அவனுடைய பார்வைக்கு எட்டும் தூரத்தில் இருப்பார்கள்.

அப்போது உயிரைக் கைப்பற்றும் வானவர் வந்து அவனருகில் அமருவார். அவனை நோக்கி நல்ல ஆத்மாவே! நீ இந்த உடலிலிலிருந்து வெளியேறி அல்லாஹ்வின் மன்னிப்பை நோக்கியும் அவனுடைய பொருத்தத்தை நோக்கியும் செல் என்று கூறுவார். தோல் பையொன்றிலிருந்து நீர் வழிந்து விடுவது போன்று அந்த ஆத்மா வெளியேறிவிடும். அவர் அதனை எடுத்துச் செல்வார்.

அதனை அவர் எடுத்ததும் அருகிலுள்ள வானவர்கள் உடனே சுவர்க்கத்து துணியிலும் நறுமணத்திலும் அதனை வைத்து விடுவார்கள். அதிலிருந்து கஸ்தூரி வாடை வீசும். அந்த வானவர்கள் அதனை சுமந்தவர்களாக முதலாவது வானத்தை நோக்கிச் சென்று வானத்தைத் திறந்துவிடுமாறு அதிலுள்ள வானவர்களிடம் கூறுவார்கள்.

அந்த வானவர்கள் வானத்தைத் திறந்து அந்த ஆத்மாவை வரவேற்பார்கள். ஒவ்வொரு வானத்திலும் இவ்விதமே நடைபெறும். ஏழாவது வானத்தை கடந்து சென்றதும் அல்லாஹ் ஆத்மாவை சுமந்து சென்ற

வானவர்களை நோக்கி எனது இந்த அடியானுடைய செயல்களை இல்லிய்யீனிலே (இறை நம்பிக்கையாளர்களின் உயிர்கள் இருக்குமிடம்) பதிவு செய்துவிட்டு பூமியில் உள்ள அவனது உடலில் அவனுடைய ஆத்மாவை சேர்த்துவிடுங்கள் என்று கூறுவான்.

(அறிவிப்பாளர்: பராஉ பின் ஆசிப் (ரலி) நூல்: அஹமத் 17803)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இறை நம்பிக்கையாளரின் உயிர் பிரியும் போது அதை இரு வானவர்கள் எடுத்துக்கொண்டு (வானுலுகிற்க்கு) ஏறிச் செல்வார்கள்.

அப்போது வானுலகவாசிகள் (வானவர்கள்) "ஒரு நல்ல ஆன்மா பூமியிலிருந்து வந்திருக்கிறது. அல்லாஹ் உனக்கு பேரருள் புரிவானாக! நீ குடியிருந்து வந்த உடலுக்கும் பேரருள் புரிவானாக! என்று பிரார்த்திப்பார்கள். பிறகு அந்த உயிர் வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ்விடம் கொண்டு செல்லப்படுகிறது. பிறகு அல்லாஹ் "இதை இறுதி தவணை வரை (மறுமை நாள் வரை தங்க வைப்பதற்காகக்) கொண்டு செல்லுங்கள்!" என்று கூறுவான்.

(அறிவிப்பாளர் அபுஹுரைரா (ரலி) நூல்: முஸ்லிம் 5510)

இலேசான விசாரணை:

அடக்கம் செய்யப்பட்டவுடன் மரணித்தவருக்கு விசாரணை ஆரம்பித்து விடுகிறது. வானவர்கள் மிகச் சில கேள்விகளை மட்டும் கேட்பார்கள். நல்லடியாராக இருந்தால் இலகுவாக கேள்விகளுக்கு பதில் கூறிவிடுவார். பிறகு அவருக்கு இன்பமான வாழ்வு ஆரம்பித்து விடுகிறது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள இரண்டு

வானவர்கள் இறந்தவரிடம் வந்து அவரை எழுந்திருக்கசு செய்து அமர வைப்பார்கள். அவர்கள் அந்த அடியானை நோக்கி உனது இறைவன் யார்? என்று கேட்பார்கள் அதற்கு அவர் எனது இறைவன் "அல்லாஹ்"என்று கூறுவார் பிறகு உனது மார்க்கம் என்ன? என்று கேட்பார்கள் அதற்கு அவர் எனது மார்க்கம் "இஸ்லாம்" என்று கூறுவார். உங்களிடத்தில் அனுப்பப்பட்ட இவர் யார்? என்று வானவர்கள் கேட்பார்கள் அதற்கு அவர் இவர் "அல்லாஹ்வின் தூதர் ஆவார்" என்று கூறுவார். இதை நீ எவ்வாறு அறிந்து கொண்டாய்? என்று கேட்பார்கள் அதற்கு அவர் அல்லாஹ்வின் வேதத்தை ஓதினேன். அதனை விசுவாசம் கொண்டேன். அதனை உண்மைப்படுத்தினேன் என்று கூறுவார்.

எனது அடியான் உண்மை கூறிவிட்டான். அவனுக்காக சொர்க்கத்தின் விரிப்புகளை விரித்து விடுங்கள். சுவர்க்கத்தின் ஒரு கதவை அவனுக்காக திறந்து விடுங்கள் என்று ஒருவர் வானில் இருந்து அப்போது கூறுவார். அவனுடைய கண் பார்வை எட்டும் அளவிற்கு அவனுடைய அடக்கஸ்தலம் விசாலமாக்கப்படும்.

அப்போது நறுமணம் கமலா அழகிய ஆடை அணிந்து வசீகரமான தோற்றத்துடன் ஒரு மனிதர் அவரிடத்தில் வருவார். அம்மனிதர் அவரை நோக்கி உனக்கு வாக்களிக்கப்பட்ட உனக்கு மகிழ்வூட்டக்கூடிய நன்னாள் இதுவாகும் என்று கூறுவார்.

அந்த இறை நம்பிக்கையாளர் அம்மனிதரை நோக்கி நீ யார்? என்று கேட்பார். அதற்கு அம்மனிதர் நான் தான் (நீ உலகில் செய்து வந்த) உனது நல்ல காரியங்கள் என்று கூறுவார். அப்போது அந்த இறைநம்பிக்கையாளன் இறைவா! நான் தேடி வைத்துள்ள செல்வமான (நன்மையையும்)

எனது குடும்பத்தினர்களையும் சென்றடைய மறுமைநாளை இப்போதே ஏற்படுத்திவிடு என்று கூறுவார். மரண வேளையின் போது இறை நம்பிக்கையாளரின் நிலை இதுவாகும்.

(அறிவிப்பவர் பராஉ பின் ஆசிப் (ரலி) நூல்: அஹமத் 17803)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஓர் அடியாரின் உடலை சவக்குழியில் அடக்கம் செய்துவிட்டு, அவருடைய தோழர்கள் திரும்பும் போது அவர்களது செருப்பின் ஓசையை பிரேதம் செவியேற்கும். அதற்குள் இரண்டு வானவர்கள் அவனிடம் வந்து, அவனை எழுப்பி உட்கார வைத்து முஹம்மத் எனும் இந்த மனிதரைப் பற்றி நீ என்ன கருதி கொண்டிருந்தாய்? என்று கேட்பர். இதற்கு, "இவர் அல்லாஹ்வின் அடியாரும் அவனுடைய தூதருமாவார் என நான் சாட்சியம் கூறுகின்றேன்" என்பர். பிறகு "(நீ கெட்டவனாக இருந்திருந்தால் நரகத்தில் உனக்குக் கிடைக்க விருந்த) தங்குமிடத்தைப் பார்! (நீ நல்லவனாக இருப்பதால்) அல்லாஹ் இதற்கு பதிலாக உனக்கு சொர்க்கத்தில் தங்குமிடத்தை ஏற்படுத்தியுள்ளான்" என்று அவரிடம் கூறப்பட்டதும் அவர் அவ்விரண்டையும் ஒரே நேரத்தில் காண்பார்.

(அறிவிப்பாளர் அனஸ் (ரலி) நூல்: புகாரி 1338)

இறை நம்பிக்கையாளரின் ஆத்மா சொர்க்கத்து மரத்தில் வாழும் பறவையாக (மாற்றப்படும்) மறுமை நாளில் அவரது உடம்புடன் அல்லாஹ் அவரை எழுப்புகின்ற வரை சொர்க்கத்துப் பறவையாகவே) இருப்பார்.

(அறிவிப்பாளர்: கஃப் பின் மாலிக் (ரலி) நூல் நஸயீ 2046)

நெருக்கத்திற்குப் பிறகு விசாலமாக்கப்படும்:

நல்லவராக இருந்தாலும் தீயவராக இருந்தாலும் இறந்தவரை

மண்ணறையில் வைத்தவுடன் மண்ணறை அவரை ஒரு முறை நெருக்கும். மரணித்தவன் கெட்டவனாக இருந்தால் விலா எலும்புகள் ஒன்றோடு ஒன்று கோர்த்துக் கொள்கின்ற அளவிற்கு அது தொடர்ந்து நிறுத்திக் கொண்டே இருக்கும். நல்லவனாக இருந்தால் தொடர்ந்து நெருக்காமல் அவனை விட்டு விடுகிறது. பிறகு அவருடைய மண்ணறை விசாலமாக்கப்பட்டு அவன் நெருக்கடி இல்லாமல் நிம்மதியாக மண்ணறை வாழ்வை அனுபவிப்பார்.

சிறந்த நபித்தோழரான சாத் பின் முஆத் என்ற நபித்தோழரையும் மண்ணறை நெருக்கியது என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். மண்ணறை நெருக்கும் பண்புடையது அதனுடைய நெருக்கத்திலிருந்து யாரேனும் ஒருவர் தப்பிப்பதாக இருந்தால் சஃத் அதிலிருந்து தப்பித்து இருப்பார். (ஆனால் அவரையும் மண்ணறை நெருக்கியது).

(அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) நூல்: தஹதீபுல் ஆஸார் 797)

உங்களுடன் இருந்த இந்த மனிதர் குறித்து நீ என்ன சொல்லிக் கொண்டிருந்தாய்? என்ற நபி (ஸல்) அவர்களைப் பற்றி நல்லவரிடம் கேட்கப்படும். அதற்கு அவர் இறைவனின் தூதர் என்று நான் நம்பினேன். அவர் எங்களிடத்தில் தெளிவான சான்றுகளைக் கொண்டு வந்தார். அவர் உண்மையாளர் என்று கருதி அவரை நாங்கள் பின்பற்றினோம் என்று கூறுவார். அதற்கு நீ உண்மையே கூறினாய். இவ்வாறே நீ வாழ்ந்து மரணித்தாய். இதே நிலையிலேயே அல்லாஹ் நாடினால் எழுப்பப்படுவாய் என்று அவரிடம் கூறப்படும். பிறகு அவருடைய பார்வை எட்டுகின்ற அளவிற்கு அவருடைய மண்ணறை விசாலமாக்கப்படும்.

(அறிவிப்பாளர் அபு ஹுரைரா (ரலி) நூல்: தபரானி பாகம் 2 பக்கம் 105)

இருள் அகற்றப்பட்டு ஒளி பாய்ச்சப்படும்:

பொதுவாக மண்ணறைகளில் இருள் சூழ்ந்திருக்கும் நல்லவர்களின் மண்ணறைகளில் இருள் அகற்றப்பட்டு தேவையான ஒளி கொடுக்கப்படும் எனவே நல்லவர்கள் எந்தவிதமான அச்சமும் இல்லாமல் நிம்மதியாக மண்ணறை வாழ்வை கழிப்பார்கள். இதை பின்வரும் ஹதீஸ்களிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

மதீனத்து பள்ளிவாசலை கூட்டிப் பெருக்குபவர் ஆக இருந்த கருத்த "பெண்" அல்லது "இளைஞர்" ஒருவரை காணாமல் அல்லாஹ்வின் தூதர் (ஸல அவர்கள் விசாரித்தார்கள். "அவர் இறந்துவிட்டார்" என மக்கள் தெரிவித்தனர். "நீங்கள் எனக்கு தெரிவித்திருக்கக் கூடாதா?" என அல்லாவின் தூதர் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அவர் (இறந்த) விஷயத்தை மக்கள் அற்ப்பமாக கருதி விட்டனர் போலும். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் "அவரது மண்ணறையை எனக்கு காட்டுங்கள்" என்று கூறினார்கள். மக்கள் அதை காட்டியதும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அங்கு (சென்று) அவருக்காக (இறுதித்) தொழுகை நடத்தினார்கள். பிறகு "இந்த அடக்கத்தலங்கள் அவற்றில் வசிப்போருக்கு இருள் மண்டிக் காணப்படுகின்றன. அல்லாஹ் எனது தொழுகையின் மூலம் அவற்றில் அவர்களுக்கு வெளிச்சத்தை ஏற்படுத்துவான்" என்று கூறினார்கள்.

(அறிவிப்பாளர் அபு ஹுரைரா (ரலி) நூல்: முஸ்லிம் 1742)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இறை நம்பிக்கையாளன் மண்ணறையில் பசுமையான தோட்டத்தில் இருப்பார். 70 முழம் வரைக்கும் அவருடைய மண்ணறை விசாலமாக்கப்படும். பௌர்ணமி இரவில்

சந்திரனின் வழியை போல அவருக்கு வெளிச்சம் தரப்படும்.
(அறிவிப்பாளர் அபு ஹுரைரா (ரலி) நூல்: முஸ்னது அபி யஃலா 6504)

மரணித்தவரின் மண்ணறையை விசாலமாக்குமாறும் ஒளி கொடுக்குமாறும் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்துள்ளார்கள். இதன் மூலம் நல்லவர்களுக்கு மண்ணறையில் ஒளி தரப்படுகிறது என்பதை புரிந்து கொள்ளலாம்.

(என் முதல் கணவர்) அபூ ஸலாமாவின் (இறுதி நாளில் அவரது) பார்வை நிலைகுத்தி நின்றபோது அல்லாவின் தூதர் (ஸல்) அவர்கள் வந்து அவருடைய கண்களை மூடி விட்டார்கள். பிறகு, "உயிர் கைப்பற்றப்படும் போது பார்வை அதைப் பின்தொடர்கிறது" என்று கூறினார்கள். அப்போது அபுசலமாவின் குடும்பத்தார் சப்தமிட்டு (புலம்பி) அழுதனர். அல்லாவின் தூதர் (ஸல்) அவர்கள், "உங்களுக்காக நீங்கள் நல்லதைத் தவிர வேறு எதையும் வேண்டாதீர்கள். ஏனெனில் நீங்கள் சொல்வதற்கு வானவர்கள் 'ஆமீன்' கூறுகின்றனர்" என்று கூறினார்கள். மேலும் "இறைவா! அபூசலமாவை மன்னிப்பாயாக! நல்வழி பெற்றவர்களிடையே அவரது தகுதியை உயர்த்துவாயாக! அவருக்குப் பிறகு எஞ்சியிருப்போருக்கு அவரை விடச் சிறந்த துணையை வழங்குவாயாக! அகிலத்தின் அதிபதியே! எங்களுக்கும் அவருக்கும் மன்னிப்பு அருள்வாயாக! அவரது மண்ணறையை விசாலமாக்குவாயாக! அதில் அவருக்கு வெளிச்சத்தை ஏற்படுத்துவாயாக" என்று பிரார்த்தித்தார்கள்.

(அறிவிப்பாளர் உம்மு சலமா (ரலி) நூல்: முஸ்லிம் 1678)

புதைக்கப்படாமல் இறந்தவர்களின் (மண்ணறை) நிலை:

மண்ணறைவாழ்வுஎன்றுசொல்லப்படுவதால்புதைக்கப்பட்ட இடத்தில் தான் இறந்தவர்கள் இருப்பதாக எண்ணி விடக்கூடாது.

மரணிக்கும் மக்களில் அதிகமானோரை மண்ணில் புதைப்பதால் மண்ணறை வாழ்க்கை என்று நாம் அழைக்கின்றோம். கடலில் மூழ்கி மீனுக்கு இரையாகியவர்கள்; தீயில் கருகி சாம்பலானவர்கள்; மிருகங்களால் வேட்டையாடப்பட்டு உண்ணப்பட்டவர்கள்; இவர்களுக்கெல்லாம் மண்ணறை என்பது கிடையாது. ஆனால் மண்ணில் புதைக்கப்பட்டவர்கள் சந்திக்கும் மறைமுகமான வாழ்வை இவர்களும் கண்டிப்பாக சந்திப்பார்கள்.

அழகான மாளிகை:

இறந்துவிட்ட நல்லடியார்களுக்கு அற்புதமான அழகான வீடு தயார் செய்து தரப்படும். அங்கே அவர்கள் மண்ணறை வாழ்வு என்ற மறைமுகமான வாழ்வை இன்பமாகக் கழித்துக் கொண்டிருப்பார்கள். நபி (ஸல்) அவர்கள் **மிஃராஜ் இரவின் போது நல்லவர்களுக்கு இப்படிப்பட்ட பாக்கியம் இருப்பதை உணர்ந்து கொண்டார்கள்.**

பிறகு அவ்விருவரும் அம்மரத்தில் என்னை ஏற்றிக் கொண்டு போய் அங்கு ஒரு வீட்டில் பிரவேசிக்கச் செய்தார்கள். நான் இதுவரை இப்படி ஒரு அழகான வீட்டைப் பார்த்ததே இல்லை. அதில் சில ஆண்களும், வயோதிகர்களும், இளைஞர்கள், பெண்கள், சிறுவர்கள் ஆகியோரும் இருந்தனர். பிறகு அவ்விருவரும் அங்கிருந்து என்னை அழைத்து மரத்தில் ஏற்றி இன்னொரு மாளிகையில் பிரவேசிக்கச் செய்தனர். அது மிகவும் அழகானதும் சிறப்பானதுமாக இருந்தது. அதில் வயோதிகர்களும் இளைஞர்களும் இருந்தனர். பிறகு நான் இருவரிடமும், "இரவு முழுவதும் என்னை நீங்கள் சுட்டிக் காண்பித்தீர்களே, அப்போது நான் கண்டவற்றைப் பற்றிய விபரங்களைச் சொல்லுங்கள்!" எனக் கேட்டேன். அதற்கு இருவரும் "ஆம்! நீர் நுழைந்த முதல் மாளிகை சராசரி மூமின் (ஓர் இறைவனை மட்டுமே வணங்கி அவனுடைய தூதரை

பின்பற்றியவர்)களின் இறப்பிடம். அடுத்த மாளிகையோ உயிர் தியாகிகளின் இருப்பிடம். நான் ஜிப்ரீல், இவர் மீக்காயீல்" என்று கூறிவிட்டு "அப்போது உமது தலையை உயர்த்தும்"என்றனர். நான் எனது தலையை உயர்த்தியதும் எனக்கு மேற்புறம் மேகம் போல் இருந்தது. அப்போது இருவரும் "இதுவே (மறுமையில்) உமது இருப்பிடம்" என்றதும் நான், "எனது இருப்பிடத்தில் என்னை நுழைய விடுங்களேன்" என்றேன். அதற்கு இருவரும் 'உமது வாழ்நாள் இன்னும் மிச்சமிருக்கிறது. அதை நீர் இன்னும் பூர்த்தி செய்யவில்லை. எனவே அதனை நீர் பூர்த்தி செய்ததும் நீர் உமது இருப்பிடம் வருவீர்' என்றனர் என்று கூறினார்.

(அறிவிப்பவர் சமூரா பின் ஜுன்துப் (ரலி) நூல்: புகாரி 1386)

சொர்க்கம் எடுத்துக் காட்டப்படும் :

நல்லடியார் சந்தோஷமாக மண்ணறை வாழ்வை கழிக்க வேண்டும் என்பதற்காக அடிக்கடி அவருக்கு சொர்க்கம் காட்டப்படும். அதைப் பார்த்து அவர் சந்தோஷம் அடைந்து கொண்டே இருப்பார்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். உங்களில் ஒருவர் இறந்து விட்டால் அவர் தங்குமிடம் அவருக்கு காலையிலும் மாலையிலும் எடுத்துக்காட்டப்படும். அவர் சொர்க்கவாசியாக இருந்தால் சொர்க்கத்திலிருப்பதாகவும், நரகவாசியாக இருந்தால் நரகத்திலிருப்பதாகவும் (எடுத்துக்காட்டப்படும்) மேலும், "அல்லாஹ் மறுமை நாளில் உன்னை எழுப்புகின்றவரை இதுவே (மண்ணறை) எனது தங்குமிடம்" என்று கூறப்படும்.

(அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) நூல் : புஹாரி 1379)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நல்லடியாருக்கு நரகத்தில் ஒரு வாசலை காட்டுங்கள் என்று கூறப்படும்

நரகத்தின் ஒரு வாசல் அவருக்குக் காண்பிக்கப்பட்டு நீ அல்லாஹ்விற்கும் அவனுடைய தூதருக்கும் மாறு செய்திருந்தால் இதுதான் உனது இடமாக ஆகியிருக்கும். (ஆனால் நீ மாறு செய்யவில்லை. எனவே இதிலிருந்து தப்பித்து விட்டாய்) என்று கூறப்படும். அப்போது அவர் மிகவும் சந்தோஷமும் பரவசமும் அடைவார். பிறகு இவருக்கும் சொர்க்கத்தில் ஒரு வாசலை திறந்து விடுங்கள் என்று கூறப்படும். சொர்க்கத்தின் வாசல் அவருக்காக திறக்கப்பட்டு இதுதான் அல்லாஹ் உனக்கு ஏற்படுத்திய உனது இடமாகும் என்று கூறப்படும் அப்போது அவர் சந்தோஷமும் பரவசமும் அடைவார்.

(அறிவிப்பவர்: அபுஹுரைரா ரலி: நூல் தப்ரானி 2680)

திருப்தியான வாழ்க்கை:

உலக வாழ்வில் எவ்வளவு தான் இன்பங்களை மனிதன் அடைந்தாலும் திருப்தி அவனுக்கு கிடைப்பதில்லை. இதனால் நிம்மதியின்றி செல்வத்தைத் தேடிக் கொண்டே வாழ்நாளைக் கழித்து விடுகிறான். ஆனால் நல்லவர்களுக்கு மண்ணறை வாழ்க்கை என்பது திருப்திக்குரியதாகவும், சந்தோஷத்திற்குரியதாகவும் இருக்கும். சத்தியத்திற்காக உயிர் நீத்த நபித்தோழர்கள் இப்படிப்பட்ட நிலையை அடைந்துள்ளார்கள் என்பதை பின்வரும் சம்பவத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்..

"பிஃரு மஊனா" (என்னுமிடத்தில் பிரசாரத்திற்காகச் சென்ற தமது) தோழர்களைக் கொன்றவர்களுக்குத் தீங்கு நேர - அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் மாறு செய்த பனுசுலைம் கோத்திரத்தைச் சேர்ந்த) ரிஅல் தக்கவான் மட்டும் உஸய்யா ஆகிய குலத்தினருக்கு கேடு நேர - அல்லாவின் தூதர் (ஸல்) அவர்கள் முப்பது காலை (தொழுகை) நேரங்களில்

பிரார்த்தித்தார்கள். பிஃரு மஊனாவில் கொல்லப்பட்டவர்களின் விஷயத்தில் குர்ஆன் வசனம் ஒன்று அருளப்பட்டது. அதை நாங்கள் ஓதி வந்தோம். பின்னர் பின்னாளில் அது (இறைவனால்) நீக்கப்பட்டு விட்டது. "நாங்கள் எங்கள் இறைவனிடம் சென்று சேர்ந்து விட்டோம் அவன் எங்களைக் குறித்து திருப்தி அடைந்து விட்டான். நாங்கள் அவனைக் குறித்து திருப்தி அடைந்தோம்" என்று எங்கள் சமூகத்தாரிடம் தெரிவித்து விடுங்கள் என்பதே அந்த வசனம்.

(அறிவிப்பாளர் அனஸ் (ரலி) நூல் : புகாரி 2814)



14. மண்ணறை வெற்றிக்கான காரணங்கள்

இறை நம்பிக்கை வேண்டும்:

அல்லாஹ்வை நம்புகின்ற விஷயத்தில் தவறிழைக்காமல் அவனை நம்ப வேண்டிய முறைப்படி நம்பியவர்களுக்கு வெற்றி கிடைப்பதாக நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே அல்லாஹ்வுக்கு யாரையும் இணையாக ஆக்காமல் அவனை மட்டுமே விசுவாசம் கொண்டு வணங்கி வர வேண்டும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். மண்ணறையில் ஒரு இறை நம்பிக்கையாளர் (மூஃமின்) எழுப்பி உட்கார வைக்கப்பட்டதும் அவரிடம் (இரு வானவர்களைக்) கொண்டு வரப்(பட்டு கேள்வி கேட்கப்)படும். பிறகு (அவர்களிடத்தில்) அந்த இறை நம்பிக்கையாளர், "அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை; முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனுடைய தூதராவார்கள்" என சாட்சியம் கூறுவர். இதையே அல்லாஹ், எவர் நம்பிக்கை கொள்கிறாரோ அவர்களை இவ்வுலக வாழ்விலும், மறுமையிலும் உறுதியான சொல்லைக் கொண்டு அல்லாஹ் உறுதிப்படுத்துகின்றான" (குர்ஆன்14:27) எனக் குறிப்பிடுகிறான்.

(அறிவிப்பாளர் பராஉ பின் ஆஸிப் (ரலி) நூல் : புகாரி 1389)

நற்காரியங்கள் செய்ய வேண்டும்:

இறந்த பிறகு நாம் சம்பாதித்த செல்வமோ, பெற்றெடுத்த குழந்தைகளோ நமக்குத் துணையாக வரமாட்டார்கள். மாறாக நாம் இந்த உலகில் செய்த நல்ல காரியங்கள் மட்டும் நான் நம்முடன் துணைக்கு வரும். எனவே நல்ல காரியங்களை அதிகமாகச் செய்து கொள்ள வேண்டும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இறந்து போனவரை மூன்று பொருட்கள் பின் தொடர்ந்து செல்கின்றன. (அவற்றில்) இரண்டு திரும்பி விடுகின்றன. ஒன்று மட்டுமே அவருடன் தங்கி விடுகிறது. அவரை அவருடைய குடும்பமும், செல்வமும் அவர் செய்த செயல்களும் பின்தொடர்ந்து செல்கின்றன அவற்றில் அவருடைய குடும்பமும் செல்வமும் திரும்பி விடுகின்றன. அவருடைய செயல்கள் மட்டுமே அவருடன் தங்கிவிடும்.

(அறிவிப்பாளர் அனஸ் (ரலி) நூல்: புகாரி 6514)

குறிப்பாக இறந்த பிறகும் நன்மைகளைப் பெற்றுத் தரக்கூடிய நல்லறங்களைச் செய்து கொள்ள வேண்டும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். மனிதன் இறந்துவிட்டால் அவனுடைய மூன்று செயல்களைத் தவிர மற்ற அனைத்தும் நின்று விடுகின்றன.

1. நிலையான அறக்கொடை

2. பயன்பெறப்படும் கல்வி.

3 அவனுக்காக பிரார்த்திக்கும் (அவனுடைய) நல்ல பிள்ளைகள்

(அறிவிப்பாளர் : அபு ஹுரைரா ரலி முஸ்லிம் 3084)

சிரமங்களை பொறுத்துக் கொள்ள வேண்டும்:

மறுமையில் நல்ல பலன்களை அடைய வேண்டும் என்பதற்காக இந்த உலகத்தில் அல்லாஹ் நமக்கு நோய்களையும், சிரமங்களையும் தருகிறான். இதை சகித்துக் கொள்ளாதவர்கள் இறைவனை ஏசி நன்றி கெட்டத்தனமாக நடந்து கொள்கிறார்கள். இது தவறாகும்.

எவ்வளவு சிரமங்கள் வந்தாலும் அதைப் பொறுத்துக்

கொண்டு மருத்துவம் செய்பவர்களுக்கு இறைவனின் அன்பும் அருளும் கிடைக்கிறது. வயிற்று வலியால் இறந்தவர்கள் மண்ணறையில் வேதனை செய்யப்பட மாட்டார்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

சுலைமான் பின் ஸுரத் மற்றும் ஹாலித் பின் உர்ஃபுதா ஆகியோருடன் நான் அமர்ந்திருந்தேன். வயிற்று நோயால் இறந்து போன ஒருவரை (புதைப்பதற்காக) பின் தொடர்ந்து செல்ல வேண்டும் என்று அவ்விருவரும் எண்ணிக் கொண்டிருந்தார்கள். அப்போது வயிற்று நோயால் இறந்து விடுபவர் மண்ணறையில் வேதனை செய்யப்பட மாட்டார் என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள் இல்லையா? என்று அவர்களில் ஒருவர் இன்னொருவரிடம் கேட்டார். அதற்கு ஆம் என்று இன்னொருவர் பதில் அளித்தார்.

(அறிவிப்பாளர் அப்துல்லாவின் யஸார் (ரலி) அஹமத் 17591)

அல்லாஹ்வின் பாதையில் உயிர் தியாகம் செய்தல்:

அல்லாஹ்விற்காக உயிர் தியாகம் செய்தவர்களுக்கு தனி சிறப்பு மார்க்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மரணத்திற்குப் பிறகு சந்தோஷமான வாழ்வு இவர்களுக்கு கிடைக்கிறது. இவர்கள் மண்ணறை வேதனையிலிருந்து இவர்கள் பாதுகாக்கப்படுகிறார்கள்.

அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டோரை இறந்தோர் என எண்ணாதீர்கள்! மாறாக அவர்கள் தம் இறைவனிடம் உயிருடன் உள்ளனர். உணவளிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு அல்லாஹ் வழங்கும் அருளை எண்ணி மகிழ்கின்றனர். அவர்களுடன் (இதுவரை) சேராமல் பின்னால் (உயிர் தியாகம் செய்து) வரவிருப்பவருக்கு எந்த பயமும்

இல்லை. அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள் என்பதை எண்ணி மகிழ்ச்சியுடன் உள்ளனர்.
(குர்ஆன் 3:169)

இந்த வசனத்திற்குரிய விளக்கத்தை நபிசல் அவர்கள் நமக்கு தெளிவுபடுத்தியுள்ளார்கள். அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டவர்கள் எவ்வளவு இன்பமாக வாழ்கிறார்கள் என்பதை பின்வரும் சம்பவத்தின் மூலம் அறியலாம்.

நாங்கள் அப்துல்லா பின் மஸ்ஊத் (ரலி) அவர்களிடம், (நபியே!) அல்லாஹ்வின் வழியில் கொல்லப்பட்டோரை இறந்தோர் என நீர் என்ன வேண்டாம். மாறாக (அவர்கள்) உயிருடன் உள்ளனர் தம் இறைவனிடம் (நெருக்கமாக) உள்ளனர். உணவளிக்க பெறுகின்றனர் (3:169) என்னும் இந்த இறை வசனத்தைப் பற்றி கேட்டோம் அதற்கு அவர்கள் கூறினார்கள் தெரிந்துகொள்க!, இந்த வசனத்தைப் பற்றி முன்பே நாங்கள் (நபியவர்களிடம்) கேட்டு விட்டோம்.

அப்போது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் அவர்களின் உயிர்கள் பச்சை நிற பறவைகளின் வயிறுகளில் (செலுத்தப்பட்டு) இருக்கும் அவற்றுக்கென இறை அரியணையின் (அர்ஷின்) கீழ் மாட்டப்பட்டுள்ள கண்ணாடிக் கூண்டுகள் இருக்கும். அவை சொர்க்கத்தில் விரும்பியவாறு உண்டு கழித்துவிட்டு பின்பு அந்த கூண்டுக்குள் வந்து அடையும்.

அப்போது அவர்களின் இறைவன் அவர்களிடம் ஒருமுறை தோன்றி, "நீங்கள் எதையேனும் ஆசைப்படுகிறீர்களா? என்று கேட்பான் அதற்கு அவர்கள், நாங்கள் ஆசைப்படுவதற்கு என்ன உள்ளது நாங்கள் தான் சொர்க்கத்தில் விரும்பியவாறு உண்டு கழித்துக்

கொண்டிருக்கிறோமே!" என்று கூறுவர்.

இவ்வாறே மூன்றுமுறை (கேள்வியும், பதிலும்) நடைபெறுகிறது. ஏதேனும் கேட்காமல் நாம் விடப்பட மாட்டோம் என்பதை அவர்கள் காணும்போது "இறைவா!" எங்களை உயிர்களை எங்கள் உடலுக்குள் திரும்பவும் செலுத்துவாயாக! நாங்கள் உனது பாதையில் மீண்டும் கொல்லப்பட வேண்டும்" என்று கூறுவர். அவர்களுக்கு (இதைத் தவிர (வேறு எந்த தேவையும் இல்லையென்பதை இறைவன் காணும் போது, அவர்கள் (அதே நிலையில்) விடப்படுவார்கள்.

(அறிவிப்பாளர்: மஸ்ரூக் (ரலி) முஸ்லிம் 3824)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஷஹீத்திற்கு (உயிர் தியாகி) ஆறு சிறப்புகள் வழங்கப்படுகிறது. அவருடைய ரத்தத்தில் முதல் சொட்டு (பூமியில் விழும்போதே) அவரது பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படுகிறது. சொர்க்கத்தில் அவருடைய இருப்பிடம் அவருக்கு காட்டப்படுகிறது. ஹூருல் ஈன்களை அவருக்கு மணமுடித்து வைக்கப்படும் மாபெரும் திடுக்கத்திலிருந்து அவர் பாதுகாக்கப்படுகிறார் மண்ணறை வேதனையிலிருந்தும் அவர் பாதுகாக்கப்படுகிறார். ஈமான் என்ற ஆடை அவருக்கு அணியப்படுகிறது.

(அறிவிப்பாளர்: கைஸ் ஜுதாமி (ரலி) நூல்: அஹமத் 1715)

அல்லாஹ்வின் வழியில் உயிர் தியாகம் செய்தவர்கள் உலகிலேயே சிரமங்களை அனுபவித்து விட்டதால் மண்ணறையில் அவர்கள் விசாரணை செய்யப்பட மாட்டார்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அல்லாஹ்வின் தூதரே! உயிர் தியாகியைத் தவிர மற்ற இறை நம்பிக்கையாளர்கள் மண்ணறைகளில்

(விசாரணையின் மூலம்) சோதனை செய்யப்படுகிறார்களே ஏன்? என்று ஒரு மனிதர் கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் (போரின்போது) மின்னுகின்ற வாட்கள் ஷஹீதுடைய தலையில் ஏற்படுத்திய சோதனையே போதுமானதாகும். (எனவே அவர் மன்னரையும் சோதனை செய்யப்பட மாட்டார்) என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: நசயீ 2026)

உயிர் தியாகம் செய்யாதவருக்கும் ஷஹீதுடைய அந்தஸ்து:

அல்லாஹ்வின் பாதையில் போரிட்டுக் கொல்லப்பட வேண்டிய நிலை வந்தால் உயிர் தியாகம் செய்வதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும். அல்லாஹ்விற்காக போரிட்டு மரணிக்கும் பாக்கியத்தை மனப்பூர்வமாக இறைவனிடம் கேட்க வேண்டும்.

இதனால் போரிட்டு இறக்காமல் சாதாரணமாக இறந்தாலும் கூட அல்லாஹ்வின் பாதையில் போரிட்டுக் கொல்லப்பட்டவர்களுக்குக் கிடைக்கும் சிறப்புகள் நமக்கு கிடைக்கும். விசாரணை இல்லாமல் மண்ணறை வேதனையிலிருந்து ஷஹீதுகள் பாதுகாக்கப்படுவதைப் போல நாமும் பாதுகாக்கப்படுவோம்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். யார் உண்மையான மனதுடன் இறைவழியில் வீரமரணம் அடைவதை வேண்டுகிறாரோ அவர் அ(தற்குரிய அந்தஸ்)தை அடைந்து கொள்வார். அவரை வீரமரணம் தழுவாவிட்டாலும் சரியே! (அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக் (ரலி) முஸ்லிம் 3869)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் உண்மையான மனதுடன் இறைவனிடம் வீரமரணத்தை வேண்டுவாரோ, அவரை உயிர் தியாகிகள் தகுதிக்கு அல்லாஹ் உயர்த்துவான். அவர் தனது படுக்கையில் (இயற்கை) மரணம் அடைந்தாலும் சரியே!

(அறிவிபாளர்: சஹல் பின் ஹுனைஃப் (ரலி) நூல் முஸ்லிம் 3870)

15. மறுமையின் விசாரணைக்குப் பிறகு சொர்க்கம், நரகம்

இதுவரை ஒரு மனிதன் இறந்து விட்டால் அவனுடைய இறப்புக்குப் பிறகு நடக்கக்கூடிய மண்ணறை வாழ்க்கை (அவர் புதைக்கப்பட்டாலும் சரி,அல்லது அவர் எரிக்கப்பட்டாலும் சரி) பற்றி விரிவாக தெளிவான ஆதாரங்களுடன் பார்த்தோம்.

அவன் உலகத்தில் ஒரு இறைவனை நம்பி அவன் இட்ட கட்டளைகளின்படி, தூதரைப் பின்பற்றி வாழும் பொழுது அவனுடைய இறப்பிற்க்கு பிறகு மண்ணறை வாழ்க்கை சிறந்ததாகவும், அது அல்லாமல் மற்ற எந்த வழிகளிலும் எந்தவிதமான தெளிவான ஆதாரங்கள் அற்ற நிலையில் தங்களுடைய வாழ்வை அமைத்துக் கொண்டாலோ அவர்கள் இறந்த பிறகு மண்ணறை வாழ்க்கையில் தண்டனைகளே கிடைக்கும் என்றும் இதிலிருந்து தப்பிக்கவோ அல்லது வேறு புகலிடமோ இல்லை என்பதை குர்ஆனும், நபிகளின் பொன்மொழிகளும் மிகத் தெளிவாக விளக்குகின்றன. மண்ணறைக்கு பிறகு மறுமை வாழ்வு ஆரம்பமாகும்.

மறுமை வாழ்வு என்றால் என்ன?

யுகம் முடிவு நாள் ஏற்பட்டு இந்த உலகம் முழுவதும் அழிக்கப்பட்ட பிறகு சூர் என்ற எக்காளம் ஊதப்பட்டு **இறந்துவிட்ட அனைவரும் உயிர்பிக்கப்படுவார்கள்**

முதல் மனிதர் ஆதம் (அலை) அவர்கள் முதல் இறுதி நாளின் கடைசி மனிதன் வரை அனைவரும் நியாய தீர்ப்பு நாளில் விசாரிக்கப்பட்டு நல்லவர்கள் (ஒரு இறைவனை நம்பி அவன் இட்ட கட்டளைகளின்படி, தூதரைப் பின்பற்றி வாழுந்ததினால்) நிரந்தரமாகக் சொர்க்கத்திற்கும் தீயவர்கள் (எந்தவிதமான தெளிவான ஆதாரங்கள் அற்ற நிலையில் தங்களுடைய வாழ்வை அமைத்துக் கொண்டவர்கள்) நிரந்தர நரகத்திற்கும் கொண்ட செல்லப்படுவார்கள் என்பது இறைவனின் நியதி.

சொர்க்கத்திற்கு சென்றவர்கள் அதில் நிரந்தரமாக இருப்பார்கள். விரும்பிய அனைத்தும் அவர்களுக்கு அங்கே கிடைக்கும். கவலையோ, சோர்வோ, சங்கடமோ, மன உளைச்சலோ இல்லாமல் சொர்க்கத்தின் நுழைவார்கள். நுழைந்தவர்கள் இன்பத்தை அனுபவிப்பார்கள்.

நரகத்திற்குச் சென்றவர்கள் அங்கு அணையா நெருப்பில் எரியும் விறகுகளாய் வேதனையை அனுபவிப்பார்கள். தப்பிச்செல்ல குறுக்கு வழி அங்கு இருக்காது. ஒருவனது செல்வம், பதவி எதுவும் நரக வேதனையிலிருந்து அவனைக் காப்பாற்றாது என்றெல்லாம் குர்ஆனிலும், நபி மொழிகளிலும் மிக மிக விரிவாக கூறப்பட்டுள்ளது.

மறுமை எப்பொழுது ஏற்படும் என்பதற்க்கான முன்னறிவிப்புகளும், மறுமையில் நடக்கும் நிகழ்வுகளையும மேலதிகமாக தெரிந்து கொள்ள பின் அட்டையில் உள்ள QR Code-ஐ ஸ்கேன் செய்து படிக்கவும்.

முடிவாக..

- **ஓரிறைவனை ஏற்றுக் கொள்ளுமாறும்,**
- **நபிகள் நாயகத்தை - முஹம்மது நபியை இறுதி தூதராக ஏற்றுக் கொள்ளுமாறும்,**
- **இதன் மூலம் இறைவனின் திருப்தியை பெற்றவர்களாக,**
- **இறந்த பிறகு மண்ணறையிலும்,**
- **யுக முடிவு நாள் மற்றும் தீர்ப்பு நாளுக்குப்பின் நிரந்தர சுவர்க்கத்திலும்,**

நாம் வாழ உங்களை அன்புடன் அழைக்கிறோம் சகோதர, சகோதரிகளே!

அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே!

இந்த புத்தகத்தை நீங்கள் விரும்பியோ அல்லது யார் மூலமாகவோ உங்களுக்கு அன்பளிப்பாக கிடைத்திருக்கும். இதில் முக்கியமாக நாம் தெரிய வேண்டியது என்னவென்றால் ஒரு நாள் நாமெல்லாம் இறந்து விடுவோம் என்பது நமக்கு நிச்சயமாக தெரியும் இறந்த பிறகு என்ன நடக்கும்? அப்படிங்கற ஒரு தெளிவு இல்லாமலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இந்த உலகத்தில் நாம் பிறந்திருக்கிறோம். நம்ம வாழ்கிறோம் நாம் ஒருநாள் இறந்து விடுகிறோம்.

இது எல்லாமே ஏற்கனவே முடிவு பண்ணப்பட்டு நடைபெறுகிறதா? அல்லது எதேச்சையான ஒரு நிகழ்வா? என்ற விவரம் தெரியாமலே நிறைய மக்கள் வாழ்ந்து, மடிந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த புத்தகத்தை படிக்கும் பொழுது உங்களுக்கு ஒன்று

தெளிவாக தெரிந்திருக்கும் இது எல்லாமே இறைவனுடைய ஏற்பாட்டின் படியே நடக்கிறது நமது பிறப்பு, நம்முடைய வாழ்வு, நம்முடைய மரணம், இந்த பிறப்புக்கும் இறப்புக்கும் நடுவில் நாம் எப்படி வாழ்கிறோம்? இறைவன் சொன்ன கட்டளை பிரகாரம் வாழ்கிறோமா? அல்லது நம் பெற்றோர்களை / மூதாதையர்களை பின்பற்றி எந்த ஆதாரமும் இல்லாமல் தான்தோன்றித் தனமான வழியிலே வாழ்கிறோமா என்பதுதான் கேள்வி?

இங்கே கொடுக்கப்பட்ட விளக்கங்கள் அனைத்துமே இறைவன் கட்டளை பிரகாரம் தான் உலகம் இயங்குகிறது. இறந்த பிறகு நாம் இந்த உலகத்தில் எப்படி வாழ்ந்தோம்? என்பதைப் பற்றிய கேள்விகள் நிச்சயமாக இருக்கிறது. இறைவன் சொன்ன பிரகாரம் வாழ்ந்தால் நம்மளுடைய மண்ணறை வாழ்வு செழிப்பானதாகவும், இறைக்கட்டளை கேட்காமல், ஆராய்ச்சி பண்ணாமல், நம்ம இஷ்டப்படி வாழ்ந்தால் மண்ணறை வாழ்வு தண்டனைக்குரியதாகவும் இருக்கும் என்பது தெளிவாகி இருக்கும்.

முடிவாக, நீங்கள் கொஞ்சம் சிந்திச்சு பாருங்க! இந்த உலகத்தில் நாம் 800 கோடி மக்கள் வாழ்கிறோம். ஒரு 1000 பேர் வேலை செய்ற ஒரு கம்பெனிக்கே நிர்வாகம் பண்ணுவதற்கு தெளிவான சட்ட திட்டங்கள் தேவைப்படும் பொழுது, அந்த சட்ட திட்டத்தை பேணி வேலை செய்தால்தான் நமக்கு சம்பளமே கிடைக்கும் என்று இருக்கும் பொழுது, 800 கோடி மக்கள் இருக்கக்கூடிய உலகத்தில் அவங்க அவங்க இஷ்டப்படி ஆட்டைய போட்டு, வாழ்க்கை நடத்திட்டு இறந்த பிறகு நாம சொர்க்கத்துக்கு போயிடுவோம் அப்படின்னு நாம்ம நினைக்கிறது எவ்வளவு பெரிய அறிவீனம்/முட்டாள்தனம்.

விதிவிலக்கு இன்றி எல்லாருக்கும் ஒரே நியதி/சட்ட, திட்டங்கள் இருந்தே ஆக வேண்டும் அந்த நியதியை நம்மளை படைத்த இறைவனால் மட்டும்தான் வழங்க முடியும். அந்த நியதியை

அமெரிக்காவில் உள்ளவரும் பின்பற்றியாகனும், இந்தியாவில் உளளவரும் பின்பற்றியாகனும், உலகத்தில் உள்ள எந்த மூலை முடுக்கிலே வாழ்ந்தாலும் பின்பற்றியாகனும். அந்த நியதியை, சட்ட திட்டங்களை தெள்ளத் தெளிவாக மிகச் துல்லியமாக சொல்லுவதுதான் இறைவனுடைய கடைசி இறை வேதமான **குர்ஆனும், கடைசி இறைத்தூதரான முஹம்மது (ஸல்) அவர்களது வழிமுறையம்.**

ஆகவே நீங்களும் இதை பின்பற்றி ஓரிறைக் கொள்கையை ஏற்று உங்களது வாழ்வை இவ்வுலகில் வாழும் பொழுதும், இறந்த பிறகும் சுபிட்சமாக ஆக்கி, சொர்க்கத்துக்கு செல்லக்கூடிய மக்களாக நீங்களும் ஆக வேண்டும் என்ற உங்களை அழைக்கிறோம்.

"தேடுவோருக்கு அருள்புரி இறைவா!"

"உண்மையை உணர வழி செய் யாஅல்லாஹ்!"

"மக்களுக்கு இலகுவாக்கிவை யாஅல்லாஹ்!"

நாம் அறிய வேண்டியது என்ன?

கீழ்க்கண்ட உறுதிமொழியை கூறுவதன் மூலமாகவும் ஒருவர் முஸ்லிமாக ஆக முடியும்.

"அஷ்ஹது அ(ன்)ல்லாயிலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வ ரசூலுஹு"

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என்றும், முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் நான் சாட்சி பகர்கின்றேன்'

உங்களது வாழ்க்கையின் நோக்கத்தை நிறைவேற்றிட, உண்மைக்குப் பணிந்து உங்களைப் படைத்தவனை ஏற்றுக் கொள்வதற்கு இது தகுந்த நேரமல்லவா?

ஷஹாதா (நம்பிக்கை – உறுதிமொழி)

இஸ்லாமின் முதல் தூண், நம்பிக்கை கொள்வதாகும். அந்த நம்பிக்கையை 'கலிமா' என்று கூறப்படும் 'ஷஹாதா' மூலம் வெளிப்படுத்துவதாகும். அஷ்ஹது அ(ன்)ல்லா இலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு

பொருள்: அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என்று சாட்சி பகர்கின்றேன். முஹம்மது (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் அடியார் என்றும், அவனது தூதர் என்றும் நான் சாட்சி பகர்கிறேன்.

உறுதிமொழி : அஷ்ஹது அ(ன்)ல்லாயிலாஹ இல்லல்லாஹு

உறுதிமொழியின் முதல் பாகத்தில் இறைவன் மனித சமுதாயத்திற்கு அருளியுள்ள மிக முக்கியமான உண்மை அடங்கியுள்ளது. எல்லாம் வல்ல அல்லாஹ்வைத் தவிர வணங்குவதற்குரிய இறைவன் வேறு யாருமில்லை என்பதே அது.

இறைவன் குர்ஆனில் குறிப்பிடுகின்றான்;

உங்களுக்கு முன்னர் நாம் அனுப்பிய தூதர்களுக்கெல்லாம். "நிச்சயமாக என்னைத் தவிர வணக்கத்திற்குரிய வேறு இறைவன் இல்லவே இல்லை என்னையே நீங்கள் வணங்குங்கள்" என்று நாம் வஹ்யி அறிவிக்காமலில்லை. (அல் குர்ஆன் 21:25)

இந்தக் கலிமாவைச் சொல்வதன் மூலம், அனைத்துப் படைப்புகளையும் படைத்தவன் அல்லாஹ் ஒருவனே என்றும், அவன்தான் இந்தப் பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொருவர் மீதும், ஒவ்வொரு பொருளின் மீதும் மிக உயர்ந்த அதிகாரம் படைத்தவன் என்பதை ஒரு முஸ்லிம் ஏற்றுக் கொள்கிறான்.

இதன்மூலம், அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும், எந்தப் பொருளும் வணக்கத்திற்குரியன அல்ல என்றும், அவனையே சார்ந்து, அவன்பால் நம்பிக்கை கொண்டு தன்னுடைய விசுவாசத்தையும், ஈடுபாட்டையும், கீழ்ப்படிதலையும் அவனுக்கே உரித்தாக்குகின்ற வகையில் ஒரு முஸ்லிம் தனது இதயத்தையும், உள்ளத்தையும் இறைவனுக்கு நெருக்கமாக்கிக் கொள்கிறான்.

இறைவனைத் தவிர பிறவற்றை (மலக்குகள், முஹம்மது நபி (ஸல்) உள்ளிட்ட இறைத்தூதர்கள், சமயத்துறவிகள், சிலைகள், சூரியன், சந்திரன், மரம் ஆகியன) வணங்குமாறு கட்டளையிடுவது இஸ்லாமின் அடிப்படைக் கொள்கைக்கு முரணானதாகும். ஒருவன் தனது இறப்பிற்கு முன்னர் அதற்காக வருந்தி மன்னிப்புக் கேட்டாலே தவிர இது மன்னிக்க முடியாத பாவமாகும். அனைத்து வகையான வணக்க வழிபாடுகளும் ஒரே இறைவனாகிய அல்லாஹ்வை நோக்கியே இருக்கவேண்டும்.

இறை நிராகரிப்பு என்பது, மனிதர்களின் கரங்களிலும் கற்பனையிலும் உருவான மரம் மற்றும் கல்லால் ஆன ஆண் கடவுள்கள், பெண் தெய்வங்களை நம்புவது மட்டுமல்ல

மாறாக, இஸ்லாமைத் தவிர அனைத்து வகையான பிற கொள்கைகள், மூடப்பழக்கங்களை நம்புவதும், சிறப்பு அதிகாரம் படைத்தவர்களாகவும் புனிதமானவர்களாகவும் மதத் தலைவர்களை மதித்து அவர்களை நேசிப்பதும் அவர்களுக்குக் கீழ்ப்படிவதும் இணைவைத்தலாகும்.

மேலும் இந்த இறை நிராகரிப்பாகிறது, ஜோதிடம், கைரேகை பார்த்தல், அதிர்ஷ்ட மந்திரம், குறி சொல்லுதல், மறைவான விஷயங்களைத் தெரிந்து கொள்ள முற்படுதல், சமயஞானிகளின் கல்லறைகளுக்கும், நினைவிடங்களுக்கும் சென்று தமக்காக இறைவனிடம் பரிந்துரைக்குமாறு அவர்களிடம் வேண்டுதல் போன்ற செயல்களையும் உள்ளடக்கியதாகும். அல்லாஹ்விடமே நேரடியாகப் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

தொழுகை, நோன்பு, வேண்டுதல், அடைக்கலம் நாடுதல், விலங்குகளைப் பலியிடுதல் போன்ற அனைத்து வகையான வணக்க வழிபாடுகளும் இறைவனுக்காகவே செய்யப்பட வேண்டும்.

இறைவனை மகிழ்விக்கும் செயல்களில் ஈடுபடுவது, பேசுவது, அவன் கட்டளையிட்ட, ஊக்குவித்த விஷயங்களை தனித்து நேரடியாகவோ அல்லது கூட்டாகவோ செய்வது ஆகியவையும் வணக்க வழிபாடுதான். ஆகையால், வணக்கம் என்பது இஸ்லாமின் ஐந்து கடமைகளை நிறைவேற்றுவதோடு மட்டும் குறுகிப்போய் விடவில்லை. அது வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சங்களையும் உள்ளடக்கியது.

ஒருவன் தனது குடும்பத்திற்கு உணவளிப்பது, இன்னொருவனின் மகிழ்ச்சிக்காகச் சில வார்த்தைகளைக் கூறுவது போன்ற செயல்களும் இறைவனை மகிழ்விக்கும் நோக்கில் செய்யப்பட்டால் அதுவும் ஒரு வணக்க வழிபாடேயாகும். வணக்க வழிபாடுகள் அனைத்தும் இறைவனுக்காக மட்டுமே சரியான முறையில் செய்யப்பட வேண்டும் என்பதே இதன் பொருள்.

உறுதிமொழி: அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரசூலுஹு

உறுதிமொழியின் இரண்டாவது பகுதியின் பொருள் முஹம்மது (ஸல்) அவர்கள், இறைவனின் தூதராகவும், அவனது அடியாராகவும் இருக்கின்றார்கள் என்பதாகும். இது ஒருவர் நபிகளாரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து அவற்றைப் பின்பற்ற வேண்டியதை உணர்த்துகின்றது. நபி (ஸல்) கூறியவற்றையும், போதனைகளையும், அவர்கள் தம் நடைமுறைகளையும் நம்ப வேண்டும். எதனைச் செய்யக்கூடாது என்று தடுத்துள்ளார்களோ, அவற்றைத் தவிர்த்திட வேண்டும். அவர்கள் போதித்தபடி இறைவனை மட்டுமே வணங்க வேண்டும். இறைவனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட வேத வெளிப்பாடுகளே அவர்களின் போதனைகளாகும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மனித குலமே பின்பற்றத்தக்க அளவிற்கு முன் மாதிரியாக வாழ்ந்து காட்டினார்கள். எனவே அவர்களது வாழ்க்கையையும், நடைமுறைகளையும் பின்பற்ற முயற்சிக்க வேண்டும். இறைவன் கூறுகிறான்;

"நிச்சயமாக நீர் மகத்தான நற்குணமுடையவராகவே இருக்கிறீர்."
(அல் குர்ஆன் 68:4)

மேலும் இறைவன் கூறுகின்றான்;

"எவர்கள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் உறுதியாக நம்புகிறார்களோ அவர்கள் பின்பற்றி நடக்கவேண்டிய அழகான உதாரணம் நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடமே இருக்கிறது." **(அல் குர்ஆன் 33:21)**

தம்முடைய சொற்களிலும், செயல்களிலும், நடவடிக்கை களிலும் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் குர்ஆனின்

போதனைகளின்படி வாழ்ந்திடவே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுப்பப்பட்டார்கள். நபிகளாரின் மனைவி அன்னை ஆயிஷா (ரலி) அவர்களிடம் நபிகளாரின் பண்புகள் பற்றி கேட்டபோது, அதற்கு அவர் 'குர்ஆனே அவர்களது பண்பாக இருந்தது' என்று கூறினார்.

கலிமாவின் இரண்டாவது பாகம், நாம் நம் வாழ்க்கையின் அனைத்து விஷயங்களிலும் நபிகளாரைப் பின்பற்றி வாழ வேண்டும் என்பதேயாகும். இறைவன் கூறுகின்றான்:

"(நபியே! மனிதர்களை நோக்கி) கூறுவீராக! நீங்கள் மெய்யாகவே அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்களை நேசிப்பான்." (அல் குர்ஆன் 3:31)

"....ஆகவே, நம் தூதர் உங்களுக்குக் கொடுத்ததை நீங்கள் (மனமுவந்து) எடுத்துக் கொள்ளுங்கள். அவர் எதைவிட்டும் உங்களைத் தடுத்தாரோ, அதைவிட்டு நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்." (அல் குர்ஆன் 59:7)

முஹம்மது (ஸல்) அவர்கள் இறைவனின் இறுதித்தூதர் அவர்களுக்குப் பிறகு இறைத்தூதர்கள் யாரும் வரமாட்டார்கள் என்பதும் இதன் பொருளாகும்.

"(நம்பிக்கையாளர்களே!) உங்களில் உள்ள ஆண்களில் ஒருவருக்கும் முஹம்மது (நபி அவர்கள்) தந்தையாக இருக்கவில்லை. எனினும் அவர் அல்லாஹ்வுடைய தூதராகவும் நபிமார்களுக்கு (இறுதி) முத்திரையாகவும் (இறுதி நபியாகவும்) இருக்கிறார். (ஆகவே, அவருக்குப் பின்னர் ஒரு தூதரையும் அனுப்ப மாட்டான்) அல்லாஹ் அனைத்தையும்

நன்கறிந்தவனாக இருக்கிறான்."

(அல் குர்ஆன் 33:40)

முஹம்மது (ஸல்) அவர்களின் நபித்துவத்தின் மீது நம்பிக்கை கொள்வதென்பது அவர்கள் கொண்டு வந்த வழி காட்டலிலும், சுன்னாவிலும் (அவர்களது செயல்பாடுகள் அமுதமொழிகள்) நம்பிக்கை கொள்வதையும் உள்ளடக்கியதாகும். அவர்களது வழிகாட்டுதல்களை விசுவாசமாகப் பின்பற்ற வேண்டும் என்பதையும் அது வலியுறுத்துகிறது. முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஒரு மனிதரே.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தூய்மையான நேரிய பண்பும், அசாரணமான நேர்மையும், அல்லாஹ்வின்பால் அசைக்க முடியாத நம்பிக்கையும் இஸ்லாமின்பால் உறுதிப்பாடும் கொண்டிருந்த போதிலும், அவர்கள் இறைத்தன்மை கொண்டவர்கள் அல்ல. எனவே, முஸ்லிம்கள் நபிகளாரை வணங்கமாட்டார்கள்.

நான் எப்படி முஸ்லிமாக ஆவது?

'இறைவனின் விருப்பத்திற்குக் கீழ்ப்படிபவன்' என்பதே முஸ்லிம் என்ற வார்த்தையின் பொருளாகும். (இனம், தேசியம், குலப் பின்னனி ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டு) முஸ்லிமாக ஆவது மிக எளிதானது. அது எந்தவிதமான முன் நிபந்தனையுமற்ற ஒரு எளிய வழிமுறையாகும். ஒருவர் தனித்தோ அல்லது பிறருடைய முன்னிலையிலோ தன்னை இஸ்லாமில் இணைத்துக் கொள்ளலாம். ஒருவர் முஸ்லிமாக வேண்டுமென்று விரும்பினால், இஸ்லாம் ஓர் உண்மையான மார்க்கம் என்ற பற்றுறுதியும் அதன்பால் ஆழமான நம்பிக்கையும் அவருக்கு இருந்தால், எந்தத் தாமதமுமின்றி, நம்பிக்கையின் உறுதிமொழியான கலிமாவைச் சொல்லி அவர் இஸ்லாமில் இணையலாம். இஸ்லாமின் ஐந்து தூண்களில் கலிமா முதலாவதும் முக்கியமானதுமாகும். உண்மையான நம்பிக்கையுடனும், பற்றுறுதியுடனும் கலிமா சொல்வதன் மூலம்

ஒருவர் இஸ்லாமிற்கு வந்து விடுகிறார்.

கலிமாவை (நம்பிக்கை உறுதிமொழியை) அரபியில் சொல்லிட முயற்சி செய்யுங்கள். **"அஷ்ஹது அ(ன்)ல்லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீகலஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு"**

இந்த நிகழ்ச்சிக்கு சாட்சி யாரும் தேவையில்லை. இதற்காகப் பெரிய விழா நடத்த வேண்டிய அவசியமும் இல்லை. ஏனெனில் இது உங்களது தனிப்பட்ட உறுதிமொழியே ஆகும். எனினும், முடிந்தால் முஸ்லிம்கள் சாட்சிகளாக இருக்க நீங்கள் கலிமாச் சொல்லி இஸ்லாமில் இணைவது விரும்பத்தக்கதாகும். ஆனால், இதற்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ இஸ்லாமில் இணைந்திடத் தாமதம் செய்யாதீர்கள். நீங்கள் முஸ்லிம் ஆன பிறகு குளித்து விட்டு இரண்டு ரகஅத் தொழ வேண்டும்.

இஸ்லாமில் சேரும் எண்ணத்துடன் உடல் முழுவதையும் நன்றாகச் சுத்தம் செய்து குளிப்பதற்கு 'குஸ்ல்' என்று பெயர். கடந்த காலத்தில் செய்த தவறுகளையும், பாவங்களையும் துடைத்தெறிந்து, அதுவரை நிகழ்ந்த செயல்களுக்காக அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக் கோருவதற்கான ஒரு அடையாளப் பூர்வமான நடவடிக்கையே இது எனலாம்.

கடந்தகாலப் பாவங்கள் மன்னிக்கப்படுதல்?

"....அல்லாஹ்வைத் தவிர (இவர்களின்) குற்றங்களை மன்னிப்பவன் யார்?"

(அல் குர்ஆன் 3:135)

முற்றிலும் இறைவனின் விருப்பத்திற்காகவே நீங்கள் இஸ்லாமில் இணைகிறீர்கள். உங்களது கடந்த காலப் பாவங்கள் மன்னிக்கப்பட்டு நீங்கள் இறைப்பற்றும், நேர்மையும் கொண்ட ஒரு புதிய வாழ்க்கையைத் துவக்குகின்றீர்கள். இஸ்லாமில் இணைவதற்கு

விரும்பிய ஒருவரிடம் நபிகள் நாயகம் (ஸல்), **'உம்முடைய கடந்த காலப் பாவங்கள் மன்னிக்கப்படும்'** என்று கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (ஒரு தோழரிடம்) "இஸ்லாமில் நீர் இணைவது, முன்னர் நீர் செய்த பாவங்கள் அனைத்தையும் அழித்துவிடும் என்பது உமக்குத் தெரியாதா?" (முஸ்லிம்)

> "ஒருவன் மனப்பூர்வமாக இஸ்லாமை ஏற்றுக் கொண்டால், அல்லாஹ் அவனது முந்திய அனைத்துப் பாவங்களையும் மன்னித்து விடுகிறான். அதற்குப் பின், கணக்கு பைசல் செய்யும் பணி துவங்கும். ஒவ்வொரு நற்செயலுக்கும் 10 முதல் 700 மடங்கு வரை வெகுமதிகள் அளிக்கப்படும். அல்லாஹ் பாவமன்னிப்பு வழங்காவிட்டால் மட்டுமே தீய செயல்கள் பதிவு செய்யப்படும்" என நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள். (புகாரி)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

> "சமயம் எளிதானது. யாரொருவர் சமயத்தை பளுவாக்கிக் கொண்டாரோ அவருக்கு அதே வழியில் தொடர்ந்து செல்வது சிரமமாகி விடும். எனவே அதில் நீங்கள் அதி தீவிரம் காட்ட வேண்டாம். ஆனால், முழுமையின் பக்கம் நெருங்கி வர முயற்சிகள் மேற்கொண்டு நற்செய்திகளைப் பெற்றிடுங்கள். காலை நேரங்களிலும், பிற்பகலிலும், இரவின் இறுதி நேரங்களிலும் தொழுகை புரிந்து நன்மையடையுங்கள்!" (புகாரி)

ஒருவர் இஸ்லாமை ஏற்றுக் கொள்கிறார் என்றால் அவர் தனது பழைய வாழ்க்கைக்காகவும், நம்பிக்கைகளுக்காகவும் வருத்தமடைகிறார் என்றே பொருள். இஸ்லாமில் இணைவதற்கு

முன்னால் புரிந்திட்ட பாவங்களுக்காக ஒருவர் அதிகம் கவலையுறத் தேவையில்லை. தாயின் வயிற்றிலிருந்து அப்போதுதான் பிறந்த பச்சிளம் குழந்தையைப் போல், இஸ்லாமில் சேரும்போது அவரது பதிவேடு சுத்தமாக இருக்கின்றது.

இஸ்லாமின் போதனைகளைப் பின்பற்றுவதன் முக்கியத்துவம்

முஸ்லிமாக இருப்பதென்றால் என்னபொருள் என்பதை நீங்கள் தெரிந்துகொண்டு, உண்மையான இஸ்லாமிய நெறிமுறைகளின்படி வாழத் துவங்க வேண்டும். குர்ஆனும், ஹதீஸும் (நபிகளாரின் அமுதமொழிகள்) இஸ்லாமைப் பின்பற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. இறைவன் கூறுகின்றான்.

"நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் (அங்கீகரிக்கப்பட்ட) மார்க்கம் இஸ்லாம்தான்."
(அல் குர்ஆன் 3:19)

"இஸ்லாமை அன்றி (வேறொரு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் நிச்சயமாக அவரிடமிருந்து (அது) அங்கீகரிக்கப்படவே மாட்டாது. மறுமையில் அவர் நஷ்டமடைந்தவராகவே இருப்பார்."
(அல் குர்ஆன் 3:85)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. அவன் இணை, துணையற்றவன். முஹம்மது (ஸல்) அவர்கள், அவனின் தூதர் மற்றும் அடியார். ஈஸா நபி (அலை) அவர்கள், இறைவனின் தூதர். இறைவனின் வார்த்தைகள் அன்னை மர்யமின் மீது பொழியப்பட்டு அதன்மூலம்

படைக்கப்பட்டவர் ('ஆகுக' என்று கூறி இறைவன் அவரைப் படைத்தான்); சொர்க்கம் என்பது உண்மை; அது போலவே நரக நெருப்பும் உண்மை என்று யார் சாட்சியம் பகர்கின்றாரோ அவரை அவரது செயல்களுக்கு ஏற்ப இறைவன் சொர்க்கத்தில் நுழையச் செய்வான்" (புகாரி)

"அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என்று சாட்சி பகர்ந்து யார் இறைவனை நாடுகின்றாரோ அவரை நரகத்தில் நிரந்தரமாகத் தங்கியிருப்பதை விட்டும் இறைவன் தடுக்கின்றான்" என்று நபி (ஸல்) (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

முஸ்லிமாக இருப்பதற்கான சில முக்கிய அடிப்படையான விஷயங்கள்:

நேரான செயல்களை ஏற்றுக்கொள்வதென்பது (ஷஹாதா/ முஸ்லிமாக ஆகுவதற்கு வாக்குமூலம் அளிப்பது ஆகியன) கீழ்க்கண்ட இரண்டு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதன் அடிப்படையில் அமைவதாகும்.

1. செயல்களைச் செய்வதன் நோக்கம், முற்றிலும் அல்லாஹ்வுக்காகவே இருக்க வேண்டும். புகழ் பெறுவதற்காகவோ, புகழப்படுவதற்காகவோ செய்யக்கூடாது.
2. செயல்கள் அனைத்தும் அல்லாஹ்வின் இறுதித் தூதரான நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுன்னாவின் (வழிமுறை) அடிப்படையிலேயே நிறைவேற்றப்பட வேண்டும்.

நீங்கள் அறிந்த விஷயங்களுக்காகப் பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளீர்கள். அறியாத விஷயங்களை அறிந்து கொள்வதற்காக நேரம் ஒதுக்கவும் கடமைப்பட்டுள்ளீர்கள்.

நீங்கள் ஒரு முஸ்லிமாக இல்லையென்றால், இஸ்லாமைப் பற்றி அறிந்து கொள்ள முயற்சிப்பதும், இஸ்லாமிய மார்க்கத்தில்

உங்களுக்குப் புரியாத விஷயங்களைப் பற்றி மார்க்கத்தை அறிந்தவர்களிடம் விளக்கம் கேட்டுப் பெறுவதும் உங்கள் மீது கடமையாகும்.

“நீங்கள் அறிந்திருக்கவில்லையென்றால்
அறிந்தவர்களிடம் கேளுங்கள்!”

(அல் குர்ஆன் 16:43)

அல்லாஹ்வே நீதான் நேர்வழி காட்டுபவன். இந்நூலை வாசிப்பவர்களுக்கு உனது நேர்வழியை அவர்களை அந்த நேர்வழியில் செலுத்து! புரியவை!

எல்லாப்புகழும் உனக்கே! நீ நன்கறிந்தவன்!
நன்கு செவியுறுபவன்!









Death

Say, "Indeed, the death from which you flee - indeed
it will meet you. Then you will be returned to the
Knower of the unseen and the witnessed
and He will inform you about what you used to do."

Quran 62:8













மரணம்

"நீங்கள் எதை விட்டும் விரண்டு ஓடுகிறீர்களோ,
அந்த மரணம் நிச்சயமாக உங்களை சந்திக்கும்; பிறகு,
மறைவானதையும் பகிரங்கமானதையும் நன்கறிந்தவனிடம்
நீங்கள் கொண்டு மீட்டப்படுவீர்கள் - அப்பால்,
அவன் நீங்கள் செய்து கொண்டிருந்தவை பற்றி
உங்களுக்கு அறிவிப்பான்" (என்று) (நபியே!) நீர் கூறுவீராக.
குர்ஆன் 62:8





